அலகு 6

# இந்தியாவில் நிர்வாக அமைப்பு




TCI482

## கற்றலின் நோக்கங்கள்

- அரசுத்துறையின் நிர்வாக அமைப்பு திறம்பட செயல்படத் தேவையான அறிவு, திறன் மதிப்பீடு குறித்து அறிதல்.
- அரசுத்துறையின் நிர்வாக அமைப்பு வழங்கும் வேலை வாய்ப்புகள் குறித்தத்தகவல்களை மாணவர்களுக்கு வழங்குதல்.
- இந்தியாவில் நிர்வாக அமைப்பைப் புரிந்து கொள்ள உதவுதல்.
- மத்திய அளவில், இந்திய நிர்வாக அமைப்பின் செயல்பாடுகளையும், மக்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அவற்றின் பொறுப்புகளையும் அறிதல்.
- மாறி வரும் அரசு, சந்தை, பொருளாதார சூழ்நிலையில் இந்திய நிர்வாகத்தில் எழும் சிக்கல்களைப் புரிதல்.
- இந்திய நிர்வாகத்தின் வரலாற்று பரிணாமம், சமூக பொருளாதார, அரசியல், கலாச்சார மற்றும் உலக சூழல் போன்ற பொருத்தப்பாடுகள் புரிதல்.

## 6.1 இந்தியாவில் நிர்வாகக் கட்டமைப்பு



## சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்திய நிர்வாக அமைப்பின் பரிணாமம்

நவீன இந்தியாவின் நிர்வாக அமைப்பின் தொடக்கம் காலனிய காலத்திலேயே தொடங்குகிறது. இந்தியாவில் காலனி ஆட்சியிலும் 1773–ஆம் ஆண்டு வரை முறையான நிர்வாகம் இருந்தது இல்லை. முகலாயப் பேரரசரின் அல்லது நவாப்களின் முகவர்களாகவே கிழக்கு இந்திய கம்பெனி செயல்பட்டு வந்தது. வருவாய் விவகாரங்களை நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் உள்ளூர் துணைப் பணியாளர்களை கொண்டு நிர்வகித்தார்கள். இராணுவ மற்றும் காவல் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து வந்தனர். பெரும்பான்மையான அதிகாரிகள் கல்வியறிவு அற்றவர்களாகவும், போதிய அனுபவம் மற்றும் பயிற்சி பெறாதவர்களாகவும் இருந்தனர்.

அவர்கள் வெளிநாட்டு அதிகாரிகள் என்பதால் உள்ளூர் மக்கள் மீது மரியாதையின்றியும், இரக்கமற்ற முறையிலும் நடந்து கொண்டனர் அவர்கள் எந்த சட்டமன்றத்திற்கும் பதிலளிக்க வேண்டியதில்லை என்பதால், ஊழல் மற்றும் முறைகேடுகள் அன்றாட நடவடிக்கைகள் ஆயின. ஆங்கில நாடாளுமன்ற உறுப்பினர் எட்மண்ட் பர்க், நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு இப்பிரச்சனையைக் கொண்டு சென்றார். பெரும் விமர்சனங்களுக்குப் பிறகு, 1773 ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் தொடர் சாசனங்கள் மூலம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் கிழக்கிந்திய கம்பெனியின் இந்திய நிர்வாகம் கொண்டுவரப்பட்டது. இயக்குநர்கள் குழு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியன நாடாளுமன்றம் மற்றும் பிரிட்டிஷ் அமைச்சரவையின் கீழ் கொண்டுவரப்பட்டன. எனவே, இந்தியாவில் உள்ள கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகங்கள், ஒழுங்குபடுத்தப்பட்டு நாடாளுமன்றத்திற்குப் பதில் சொல்லும் நிலை உருவாக்கப்பட்டது.

அதன் பின்னரே இந்தியாவிற்கான ஆங்கில அதிகாரிகளுக்கு ஹெய்லிபிரி கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டது. உயர் அதிகாரி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒப்பந்தப் பணி உறுப்பினர்களாக அறியப்பட்டனர். அவர்கள் கவர்னர் ஜெனரல் மற்றும் ஆளுநர்களுக்கு நிர்வாக ரீதியிலும் உதவினார்கள். இந்தியர்கள் நடுநிலை பணியாளர்களாகவும் தொலைதூரப் பணிகளுக்கும் நியமிக்கப்பட்டனர். உள்நாட்டுப் பழக்க வழக்கங்களில் கம்பெனி தலையிட விரும்பவில்லை. இதன் மூலம் மக்கள் ஆதரவைப்பெற விரும்பியது. நடுநிலைப் பணிகளுக்கும் தொலை தூரப்பணிகளுக்கும் அப்பகுதிகளின் நடுநிலை, கீழ்நிலை சாதியினர் நியமிக்கப்பட்டனர்.

1840–ஆம் ஆண்டு வரை பாரசீக மொழியே அலுவல் மொழியாக இருந்து வந்தது. ஆங்கில மக்கள் எல்லா உயர் பதவிகளிலும் ஏகபோக உரிமையாளர்களாக தங்களை வைத்துக்கொண்டு இங்கு உள்ள மேன்மக்களை கீழ்மட்ட அலுவலகத்தில் அமர்த்திக்கொண்டனர்.

இந்தியர்களையும் உயர் பதவிகளில் அமர்த்துவதற்கான தேவைகளும் மெதுவாக எழுந்தன. ஐரோப்பிய மாதிரி கல்வி மற்றும் ஆங்கில மொழிவழிக் கல்வி அறிமுகம் மெக்காலே முறையில் இந்தியர்கள் கல்வி கற்க தூண்டியது. ஆங்கிலக் கல்வி கற்பதன் மூலம் உயர் பதவிகளில் பணியாற்ற விரும்பினர். 1858–ஆம் ஆண்டில் இந்திய நிர்வாகத்தை முடியாட்சி ஏற்ற பின்பு, இந்திய ஆட்சி முறை மாற்றியமைக்கப்பட்டு இந்திய குடிமைப் பணிகள் உருவாக்கப்பட்டன. உயர்மட்ட நிர்வாகிகள் நீதித்துறை பணியாளர்கள் இந்தியக் குடிமைப் பணி போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டனர். மிகச் சிறந்த பிறப்புரிமையுள்ள உயர்ச் சாதி இந்தியர்கள் தங்களுக்கும் இந்திய குடிமைப்பணி தேர்வில் கலந்து கொள்ள

வயது வரம்பை தளர்த்த வேண்டும் என்றும் குடிமைப் பணி தேர்வுகள் இந்தியாவிலேயே நடத்தப்படவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். இவையெல்லாம் இந்திய தேசிய இயக்கத்தின் தொடக்க காலக் கோரிக்கைகள்.

இந்திய அரசாங்கச் சட்டம் 1919-நிறைவேற்றப்படும்வரை, இந்தியர்களால் உயர்ந்த ஆட்சித்துறை பதவிகளை அடைய முடிவில்லை. இரட்டை ஆட்சிச் சட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாற்றப்பட்ட துறைகள் வழங்கப்பட்டன. ஆனால் ஆட்சித்துறை அதிகாரிகள் தொடர்ந்து ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். இந்த காலகட்டத்தில், சிறு பணிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அரசுப் பணிக்கு பொதுப் பணி தேர்வு ஆணையம் அமைப்பது குறித்துச் சிந்திக்கத் தொடங்கினர். இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு, பணிகள் சீர்திருத்தப்பட்டன: இந்தியக் குடிமைப் பணிக்கு (ICS) பதிலாக இந்திய ஆட்சிப் பணி (IAS இ.ஆ.ப) கொண்டுவரப்பட்டது. இதன் மூலம், நிர்வாகப் பணிகள் அரசுப் பணிகள் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கும் முறை அடிப்படையானது.

### சுதந்திரத்திற்கு பிந்தைய இந்தியாவில் நிர்வாக அமைப்பு

இந்திய நிர்வாகத்தின் பணிகள் மற்றும் பொறுப்புகளில் சுதந்திர இந்தியாவில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சட்டம் இயற்றும் அமைப்புகளுக்கும், அமலாக்கம் செய்யும் அமைப்புகளுக்கும் பதில் சொல்லவும். பொறுப்பேற்கும்படியும் செய்தது. இந்திய அரசாங்கம் ஒரு மக்கள் நல அரசை விரும்பியதனால் அதனுடைய நிர்வாக பொறுப்புகள் பன்மடங்கு அதிகரித்தது.

ஜவஹர்லால் நேருவின் தலைமையின் கீழ் உருவான புதிய அரசு, மக்களாட்சி சமதர்மம் அமைப்பைத் தேர்ந்தெடுத்து, சமத்துவம், நவீனமயமாக்கல் போன்றவற்றை அடைய 'கலப்பு பொருளாதாரத்தை' அறிமுகப்படுத்தியது. மக்களாட்சி முறை மற்றும் சமதர்மம் முறை இரண்டினையும் உறுதிப்படுத்த 'கலப்பு பொருளாதாரத்தை' தேர்வு செய்தது. அடிப்படை தொழில்துறைகள் (எஃகு மற்றும் இரும்பு போன்றவை) அரசுத் துறை மூலமாக வளர்ச்சியடைந்தது. நடுத்தர தொழில்கள், போக்குவரத்து, விமான போக்குவரத்து ஆகியவற்றில் தனியார் துறை ஈடுபட அனுமதிக்கப்பட்டது. ஒவ்வொரு திட்டத்திலும் இலக்குகளை அடைய நிர்வாக அமைப்பு மேன்மேலும் அதிகரிக்க வேண்டியிருந்தது. முதல் மூன்று 'ஐந்தாண்டு திட்டம்' மிகப்பெரிய பலன்களை அளித்தன. ஆனால், அதன் பிறகு முதலாளித்துவம் 'குழும'ங்களாக மாறிப் பெரும் வெற்றி பெற்றன.

சோவியத் மற்றும் இதர சோசியலிச நாடுகள் பின்னடைவு அடைந்தன. 1990-களில் ஏற்பட்ட புதிய சவால்களை எதிர்கொள்ள இந்தியா உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல், மற்றும் தாராளமயமாக்கல் கொள்கையைப் பின்பற்றியது. இந்திய நிர்வாக அமைப்புத் தம்மை மாற்றிக்கொண்டுள்ளது ஊழல் பெரும் பிரச்சனையாக இருந்தது. உயர்மட்டங்களில் ஊழலும், ஊழல்வாதிகளும் அதிகமாகக் காணப்பட்டாலும், நமது பொருளாதார முறையில் தவறேதும் கிடையாது. நேரு காலத்துக்கு முன்பும் இது போன்ற ஊழல்கள் காணப்பட்டன. தற்போதைய பொருளாதார முறையிலும் காணப்படுகிறது. ஒவ்வொரு நிலையிலும் ஊழல் அதிகாரிகளும் காணப்பட்டாலும், நமது மக்களாட்சி முறையை அதற்கு காரணமாக்க முடியாது.

கணக்கெடுப்பு, கருத்துக்கணிப்பு, குறிப்பிட்ட பிரச்சனைகளுக்காக என காலனி ஆட்சியில் நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதையொட்டி சில துறைகள் உருவாக்கப்பட்டன ஆனாலும், தற்போது விடுதலைக்கு பிந்தைய இந்தியாவில் நிர்வாக அமைப்பில் இருந்தது. நீதித்துறை

வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதேபோல் கல்வி, விரிவான நீர்ப்பாசனம், தொற்றுநோய்த் தடுப்பு, மின்மயமாக்கம், பொதுச் சுகாதாரம், சாலை-ரயில்வே போக்குவரத்து வசதிகள் என ஏராளமான மக்கள் நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இந்திய நிர்வாக அமைப்புகள் மூலம் அமலாக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற நிர்வாகத்தின் ஒவ்வொரு திட்டத்திலும் நமது நிர்வாக அமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், ஒரு பயிற்சிபெற்ற, அனுபவமிக்க, நிர்வாகச் செயல்திறன் மிக்க ஒரு அமைப்பை உருவாக்குவதில் பின்னடைவு இருந்தது. இதற்கான மேம்பாட்டுத்திட்டங்கள் வெற்றி பெறவில்லை. இந்திய நிர்வாக அமைப்பை மனிதநேயமிக்க, நவீன, மக்களாட்சி மையப்படுத்தப்பட்ட அமைப்பாக மாற்றும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் கால மாற்றத்துக்கு ஏற்ற நிர்வாக அமைப்பை உருவாக்க முடியும். மக்களாட்சி முறையில் நிர்வாக அமைப்பானது விமர்சனத்திற்கும் நீதித்துறையின் கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டதல்ல. அதே நேரத்தில் தேவையற்ற அரசியல் தலையீட்டையும் தவிர்த்தல் வேண்டும். கட்டுப்பாடுகள், சமநிலைப்படுத்தல் மூலம் மேலான நிர்வாகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதே சமயம் நாட்டுக்கு வெளியே இருந்துவரும் அச்சுறுத்தல்கள், நாடுதாண்டிய அழுத்தங்களில் இருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் அரசமைப்பானது மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பையே வழங்குகிறது. அரசு வகைமைகளில் பணியாளர் இரண்டு உயர்நிலை நிர்வாகங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஒன்று மத்திய அரசு நிர்வாகம், இரண்டு மாநில நிர்வாகம் நிர்வாகப் பணிகள் அனைத்தும் மத்திய அரசின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்டவைகள். தாராளமயமாக்கல் என்பதன் பொருள், அதிகாரவர்க்கம் அதிக வேலைப்பளுவில் இருந்து விடுபடும் என்பதல்ல. மாறாக, தனியார் துறை மீதான அரசுக் கட்டுப்பாடுகளைக் குறைப்பதாகும். அதேநேரத்தில் கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை அமலாக்கம் ஆகியவற்றில் அண்மைக்காலத்தில் அதிகம் மையப்படுத்தும் போக்கினை நாம் காண்கிறோம். மக்களாட்சி சமதர்மம் மற்றும் கலப்புப் பொருளாதார அமைப்புக்காக பணியாற்றிய இந்திய நிர்வாக அமைப்பின் கரங்களில் தற்போது அதிக தனியார்மயமாக்கத்துக்காகவும் மேலும் அதிக மையப்படுத்தப்பட்ட வரி அமைப்புக்காகவும் பணியாற்றும் பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. இப்புதிய ஏற்பாடே தற்போது புதிய அரசு மேலாண்மை (என்.பி.எம்) என அழைக்கப்படுகிறது.

இந்தியாவில் நிர்வாக அமைப்பு மாறிவரும் பொருளாதார கட்டமைப்பிற்கு ஏற்றவாறு தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். இந்தியப் பொருளாதாரம் புதிய தனது உள்நாட்டு சந்தையை உள்ளூர் தனியார் நிர்வனங்களுக்கும் பன்னாட்டு நிர்வனங்களுக்கும் திறந்துவிட வேண்டும். வணிகம் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், அரசு முதலீடுகளை திரும்பப் பெறுதல், வரிவிதிப்பை மையப்படுத்துதல், மானியங்கள் நீக்க நடவடிக்கை போன்றவற்றில் இந்திய நிர்வாக அமைப்பு ஈடுபட வேண்டும். தனியார்மயமாக்கலின் எதிரொளியாக சுரங்கம், துறைமுகம், பெட்ரோலியம், விமான போக்குவரத்து போன்றவை அமைப்பு ரீதியாக குழுமமையமாக்கப்பட்டுள்ளன. அன்னிய முதலீட்டுக்காக பன்னாட்டு நிர்வனங்களையும், உள்நாட்டு தனியார் முதலீடுகளையும் எல்லாம் சேர்த்துள்ளது, மேலும் இந்திய அதிகாரவர்க்கம் சர்வதேச அமைப்புகளான உலக வங்கி, உலக வர்த்தக அமைப்பு மற்றும் சர்வதேச நிதி ஆணையம் போன்றவற்றின் வழிகாட்டுதலையும் பின்பற்ற வேண்டியுள்ளது.



12th_Political Science_Tamil_Unit_6.indd 140 04-06-2019 11:34:27

**இந்த வழிகாட்டுதலின்படியே கீழ்க்கண்ட ஒழுங்குமுறை ஆணையங்கள் இந்தியாவில் உருவாக்கப்பட்டன. அவை**

1. இந்தியக் காப்பீடு மற்றும் ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை (IRDA)
2. இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்(TRAI)
3. இந்தியப் போட்டிகள் ஆணையம் (CCI)
4. ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA)
5. இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

மேலும் புதிய ஒழுங்குமுறை ஆணையங்களை உள்கட்டமைப்பு, சுரங்கம் ஆகிய துறைகளில் தொடங்கவும் ஆலோசனைகள் நடந்து வருகின்றன. இவ்வகையான சீர்த்திருத்தங்கள் வரி நிர்வாகத்திலும் தொடர்கின்றன. உதாரணமாக, மதிப்புக் கூட்டுவரி (VAT) மற்றும் பொருள்கள் மற்றும் சேவை வரியை (GST) குறிப்பிடலாம். இந்த நடவடிக்கைகளுக்கு தொழில் துறை மற்றும் சந்தையில் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு வளர்ச்சியின் அறிகுறிகளைக் காட்டின. இதிலிருந்து பொருளாதார சீர்திருத்தம் மாற்றத்தின் அறிகுறி என நம்பப்பட்டது. இம்முயற்சிகளின் பலனாக தொழில்துறை வளர்ந்தது. சந்தை மேம்பட்டது. பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்தது. பொருளாதார சீர்திருத்தம் நல்ல விளைவுகள் அளிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. மேற்கூறிய முயற்சிகளால் இந்தியாவில் கடந்த 20 வருடங்களில் 300 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். தற்போதைய காலகட்டத்தில் உயர்மட்ட அதிகாரிகள் அதிக அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். இதற்கு அவர்களின் அதிகார மோகம் காரணமல்ல. நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அவை தேவைப்பட்டன. தொழில்நுட்ப முன்னேற்றம், பெரும் அளவில் அதிகாரப்பரவலாக்கம், சமூக செயல்பாட்டு முறை ஆகியவற்றால் இவை நிறைவேற்றப்பட்டன. இவற்றின் விளைவுகளை மேலும் சிறந்த சேவைகள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, சட்டத்தின் ஆட்சி ஆகியனவற்றை மக்கள் எதிர்பார்ப்பதில் இருந்து அரசு உணர்ந்தது. இருந்தாலும், குடிமைப் பணி அதிகாரிகளை நிர்வாகத்திறன் அற்ற கூடுதல் சுமையாகவே மக்கள் கருதினர். தகவல் உரிமைச்சட்டம், குடிமக்கள் சாசனம், சமூகத்தணிக்கை போன்றவற்றால் கூடுதல் பொறுப்புகளும், கடமைகளும் உருவாக்கப்பட்டு குடிமைப் பணி அலுவலர்கள் மக்களுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாகியுள்ளனர்.

## 6.2 அமைச்சகம், துறைகள், வாரியங்கள் மற்றும் ஆணையங்கள்

### ஒன்றிய அரசு அமைச்சகம் / துறைகள்

ஒன்றிய தலைமை செயலகம் என்பது இந்தியாவிற்கான கொள்கைகள் உருவாக்கும் முக்கிய அமைப்பாகும். மத்திய தலைமை செயலகம் என்பது பல அமைச்சகங்களையும் துறைகளையும் உள்ளடக்கியது ஆகும். இவையனைத்தும் அவற்றின் செயல்பாடுகள் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

### அமைச்சகத்தின் கட்டமைப்பு

மத்திய அரசாங்கத்தின் அமைச்சகம் மூன்று அடுக்குகளை கொண்டது.

**1. அரசியல் தலைமை**

அமைச்சகத்தின் அரசியல் தலைமை என்பவர் கேபினட் அமைச்சராகவோ, துணை அமைச்சராகவோ இருக்கலாம். சில நேரங்களில் தனிப் பொறுப்பு கொண்ட துணை அமைச்சராகவும் இருப்பர்.

**2. செயலகம் (Secretariat)**

இதன் தலைவர் செயலாளராக இருப்பார் இவர் குடிமைப் பணி சார்ந்த அதிகாரியாவார். செயலாளருக்கு உதவி புரிய இணைச் செயலர், கீழ் நிலைச் செயலர், துணைச் செயலர் போன்றோர் இருப்பர்.

**3. நிர்வாக அமைப்பு (Directorate)**

இதன் தலைவர் இயக்குநர், தலைமை இயக்குநர் , தலைமை ஆய்வாளர் (ஐ.ஜி)

ஆணையர் மற்றும் தலைமை கட்டுப்பாட்டாளர் போன்ற பெயர்களால் அழைக்கப்படுவர்.

ஒவ்வொரு அமைச்சகமும் பல துறைகளாக பிரிக்கப்படும். ஒவ்வொரு துறையும் பல தொகுதியாக பிரிக்கப்படும். தொகுதி பகுதிகளாக பிரிக்கப்படும் பகுதிகள் கிளைகளாக பிரிக்கப்படும், கிளைகள் பிரிவுகளாக பிரிக்கப்படும்.

**துறை** (செயலாளர்)
**தொகுதி** (இணைச் செயலாளர்)
**பகுதி** (துணைச் செயலாளர்)
**கிளை** (கீழ்நிலைச் செயலாளர்)
**பிரிவு** (பிரிவு அலுவலர்)

இந்திய அரசு அலுவல் விதிகள் 1961-இன்படி, அமைச்சகமும் துறைகளும் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

### மத்திய தலைமைச் செயலகம்

மத்திய ஆட்சியின் அனைத்து அமைச்சகம் மற்றும் துறைகளின் ஒட்டுமொத்த தொகுப்பே மத்திய தலைமைச் செயலகம் என்று அழைக்கப்படுகிறது. அரசமைப்பின் உறுப்பு 77 இன்படி குடியரசுத்தலைவர் பல்வேறு அமைச்சகத்திற்கு பணியை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

### மத்திய தலைமைச் செயலகத்தின் பணிகள்

1. அமைச்சர்களின் கொள்கையாக்கம் மற்றும் நாடாளுமன்றச் செயல்பாடுகளில் உதவி புரிதல்
2. சட்டங்கள் வரைதல், விதிகள் மற்றும் கொள்கைகளின் செயல் முறைகள்
3. திட்டமிடல், திட்ட உருவாக்கம்
4. அமைச்சகத்தின் செலவினங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை சார்ந்த பணிகள்
5. கொள்கைகள் மற்றும் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடுதல் கட்டுப்படுத்துதல்.
6. அமைச்சகம் மற்றும் துறை பணியாளரின் பணிகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.
7. அமைச்சகத்தின் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து மேற்பார்வையிடல் மற்றும் மாநில நிர்வாகத்துடன் தொடர்பில் இருத்தல்.

## மத்திய அரசு அமைச்சகங்கள் / துறை

**1 » விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்**

- ❖ விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வி துறை
- ❖ விவசாயம், ஒத்துழைப்பு மற்றும் விவசாயிகளின் நலத்துறை
- ❖ கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

**2 » ஆயுஷ் அமைச்சகம், இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகம்**

- ❖ இரசாயனம் மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ் துறை
- ❖ உரத் துறை
- ❖ மருந்துகள் துறை

**3 » உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம், நிலக்கரி அமைச்சகம், வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம்**

- ❖ வர்த்தகத் துறை
- ❖ தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்பு துறை

**4 » தொடர்பு அமைச்சகம்**

- ❖ தபால் துறை
- ❖ தொலைத்தொடர்பு துறை



12th_Political Science_Tamil_Unit_6.indd 142 04-06-2019 11:34:27

### 5 » நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்

- நுகர்வோர் விவகாரத் துறை
- உணவு மற்றும் பொது விநியோகத் துறை

### 7 » வட கிழக்கு மண்டல மேம்பாட்டு அமைச்சகம், குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம், புவியியல் அமைச்சகம்

- இந்திய வானியல் துறை

### 9 » மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், வெளிவிவகார அமைச்சகம், நிதி அமைச்சகம்

- பொருளாதாரம் துறை
- செலவுத் துறை
- நிதி சேவைகள் துறை
- முதலீட்டு மற்றும் பொது சொத்து மேலாண்மைத் துறை
- வருவாய்த் துறை

### 11 » சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம், சுரங்கங்கள் அமைச்சகம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சகம், பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகம்

- நிர்வாக சீர்திருத்த மற்றும் பொது குறைபாடுகள் துறை (DARPG)
- ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் நலத்துறை
- பணியாளர் மற்றும் பயிற்சித் துறை

### 13 » அணு சக்தி துறை, விண்வெளித் துறை

### 6 » பொதுநிறுவன விவகார அமைச்சகம், கலாச்சார அமைச்சகம் பாதுகாப்பு அமைச்சகம்

- பாதுகாப்புத் துறை
- பாதுகாப்பு தயாரிப்புத் துறை
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறை
- முன்னாள் ராணுவத்தினர் நலத்துறை

### 8 » உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகம், சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்

- சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை
- சுகாதார ஆராய்ச்சி துறை, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை

### 10 » கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை அமைச்சகம்

- கனரகத் தொழிற்துறை
- பொது நிறுவனங்கள் துறை

### 12 » பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், மின்வலு அமைச்சகம், ரயில்வே அமைச்சகம், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம்


- கனிம வளங்கள் துறை
- கிராம மேம்பாட்டுத் துறை

### 14 » அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

- பயோடெக்னாலஜி துறை (DBT), இந்திய அரசு
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST)
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறை (DSIR)

**15 » உள்நாட்டு விவகார அமைச்சகம் நிறுவனக் கட்டமைப்பு**

- மத்திய ஆயுதப்படை
- மத்திய போலீஸ் அமைப்பு
- எல்லை மேலாண்மைத் துறை
- வீட்டுவசதித் துறை
- உள்நாட்டு பாதுகாப்புத் துறை
- ஜம்மு மற்றும் காஷ்மீர் விவகாரத் துறை (ஜம்மு மற்றும் காஷ்மீர்)
- அதிகாரபூர்வ மொழித் துறை
- மாநிலங்கள் துறை




**16 » தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம்**
**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு**
**சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்**

**17 » நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்**

**18 » கப்பல் அமைச்சகம்**
**திறன் மேம்பாடு மற்றும் தொழில்முயற்சி அமைச்சகம்**
**சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்**

- குறைபாடுகள் கொண்ட நபர்களின் அதிகாரமளித்தல் துறை
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை

**19 » புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்**
**இரும்பு அமைச்சகம்**
**ஜவுளி அமைச்சகம்**
**சுற்றுலா அமைச்சகம்**
**பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம்**
**நீர்வள ஆதார, நதி அபிவிருத்தி மற்றும் கங்கா புத்துணர்வு அமைச்சகம்**
**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்**
**இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம்**

- விளையாட்டு துறை
- இளைஞர் விவகாரங்கள் துறை

**20 » வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்**
**மனித வள மேம்பாட்டு அமைச்சகம்**

- உயர் கல்வித் துறை
- பள்ளி கல்வி மற்றும் எழுத்தறிவு துறை



12th_Political Science_Tamil_Unit_6.indd 144 04-06-2019 11:34:27

| ஒன்றியப் பட்டியல் | மாநிலப் பட்டியல் | பொதுப் பட்டியல் |
|---|---|---|
| தேசிய முக்கியத்துவம் கொண்டவை. | உள்ளூர் மற்றும் மாநில முக்கியத்துவம் பெற்றவை | மத்திய மற்றும் மாநிலம் ஆகிய இருவருக்கும் பொதுவானப் பட்டியல் உள்ளது. |
| மத்திய அரசு மட்டும் சட்டங்களை உருவாக்க முடியும். | மாநில அரசு மட்டும் சட்டங்களை இயற்ற முடியும். | மத்திய மற்றும் மாநில அரசு சட்டங்களை சட்டப்பூர்வமாக்கலாம். |
| பாதுகாப்பு, வங்கி, பொதுவாக, வெளியுறவு மற்றும் தொடர்பு | காவல், வர்த்தகம், வணிகவியல், விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் | கல்வி, முதலீடு தொழிற்சங்கம், திருமணம், தத்தெடுப்பு மற்றும் வாரிசு |

**அமைச்சரவைச் செயலகம் (Cabinet Secretariat))**

**பணிகள்**

அமைச்சரவைச் செயலகம் பிரதமரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இதன் நிர்வாகத் தலைவர் அமைச்சரவை செயலாளர் (Cabinet Secretary) ஆவார், அவரே இந்தியக் குடிமைப் பணி அலுவலர்களின் தலைவராக கருதப்படுகிறார். இந்திய அரசு (அலுவல்கள் ஒதுக்கீடு) 1961 சட்டப் படி அமைச்சரவைச் செயலகத்தின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

**அமைச்சரவை செயலகத்தின் அமைப்பு முறை**

**அமைச்சரவை செயலகத்தின் மூன்று முக்கிய பிரிவுகள்:**

- ❖ குடிமைப் பிரிவு
- ❖ இராணுவப் பிரிவு
- ❖ நுண்ணறிவுப் பிரிவு

**குடிமைப் பிரிவு**

இப்பிரிவே மத்திய அமைச்சரவைக்கு ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்குகின்றன.

**இராணுவப் பிரிவு**

இப்பிரிவு அமைச்சரவையின் இராணுவக் குழு செயலக உதவிகளை வழங்குகின்றது.

**நுண்ணறிவுப் பிரிவு**

இப்பிரிவு அமைச்சரவையின் கூட்டுப் புலனாய்வுக் குழு சார்ந்த செயல்பாடுகளை கையாளுகின்றது.

**பிற அமைப்புகள்**

ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு (RAW), பாதுகாப்பு இயக்குநர், சிறப்பு பாதுகாப்புக் குழு (SPG), கூட்டு நுண்ணறிவுக் குழு இயக்குநர், பொதுமக்கள் குறைகள் டி.ஜி.பி (1998), தேசிய ஆணையம், இராசயன ஆயுத ஒப்பந்தங்கள்.

## பள்ளிக் கல்வித்துறை – நிர்வாக பொதுப் பட்டியல்

### மனிதவள மேம்பாட்டு துறை

### தேசிய அளவில்

- மனிதவள மேம்பாட்டு துறை (MHRD): கொள்கைகள்
- தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT): பாடத்திட்டம், பாடநூல்கள் மற்றும் பணியில் உள்ள- ஆசிரியர் பயிற்சிகள்
- தேசிய சான்றிதழ் இடைநிலைக் கல்வி (CSE)
- மத்திய இடைநிலை கல்வி வாரியம் (CBSE)

### மாநில அளவில் – பள்ளிக் கல்வித்துறை

**பள்ளிக் கல்வித்துறை**

- ஆசிரியர் தேர்வு வாரியம்
- பதின்மப் பள்ளிகளின் இயக்குநரகம்
- தொடக்க கல்வி இயக்குநரகம்
- அரசு தேர்வு இயக்குநரகம்
- பள்ளிக் கல்வி இயக்குநரகம்
- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
- முறைசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி
- பொது நூலகங்கள்
- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
- சமக்கிரா சிக்க்ஷா மாநிலத் திட்ட அலுவலகம் (SPD)

### மாவட்ட அளவில்

- முதன்மைக் கல்வி அலுவலகம் (CEO)
- மாவட்ட கல்வி அலுவலகம் (DEO)
- வட்டாரக் கல்வி அலுவலகம் (BEO)
- தலைமை ஆசிரியர் (HM) பள்ளி

- மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (DIET)
- ஒருங்கிணைந்த கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
- அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (GTTI)

- மாவட்டத் திட்ட அலுவலகம் (DPO)
- உதவித் திட்ட அலுவலகம் (APO)
- வட்டார வள மையம் (BRC)
- குறு வள மையம் (CRC)



12th_Political Science_Tamil_Unit_6.indd 146 04-06-2019 11:34:28

தலைமைச் செயலகமானது இந்திய அரசாங்கச் சட்டம் (அலுவல் பரிமாற்றம்) 1961 விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்புடையது. இச்செயலகம் அரசு கொள்கை முடிவு எடுப்பதில் அமைச்சகத்திற்கிடையேயான ஒருங்கிணைப்பு ஏற்படுத்துதல், அமைச்சகங்கள்/துறைகள் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் களைதல், செயலக நிலைக் குழுக்கள்/ தற்காலிகக் குழுக்கள் மூலம் ஒருமித்த கருத்து உருவாக்குதல் ஆகிய வழிகளில் அமைச்சரவைச் செயலகம் அரசுக்கு உதவுகிறது. நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் காலங்களில் மேலாண்மை செய்தல், அத்தகைய காலங்களில் பல்வேறு அமைச்சரகங்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியனவும் அமைச்சரவைச் செயலகப் பணிகள் தாம்.

### அமைச்சரவைக் குழுக்களுக்கு ஆதரவு

அமைச்சரவைச் செயலகம், அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்களுக்கு கீழ்காணும் உதவிகளை நல்கிறது.

- பிரதமரின் ஆணைப்படி, அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்களின் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- கூட்ட நிரல்களை முடிவு செய்து சுற்றுக்கு அனுப்புதல்.
- கூட்டப்பொருள் தொடர்பு கோப்புகளை தயார் செய்து சுற்றுக்கு அனுப்புதல்.
- பிரதமரின் ஒப்புதலுக்குப் பின் கூட்ட விவாதங்களைத் தொகுத்தல் சுற்றறிக்கையாக அனுப்புதல்.
- அமைச்சரவை மற்றும் அதன் குழுக்கள் எடுத்த முடிவுகள் நடைமுறைப் படுத்துவதை மேற்பார்வையிடுதல்.
- அமைச்சரவைக் கூட்ட ஆவணங்களை அமைச்சரவைச் செயலகப் பாதுகாப்பில் பராமரித்தல்.

### அமைச்சரவைச் செயலாளர்

இந்தியாவில் அமைச்சரவைச் செயலாளர் அலுவலகம் பதவியானது 1950-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தியாவின் முதல் அமைச்சரவை செயலாளர் என்.ஆர். பிள்ளை ஆவார். அமைச்சரவை செயலரே அமைச்சரவை செயலகத்தின் தலைவர் ஆவார். இந்திய குடிமைப் பணிகளில் அமைச்சரவை செயலர் பதவியே உயரியது. இதனால் குடிமைப் பணி அலுவலர்கள் மத்தியில் இவரே முதன்மையானவர்.

**மத்திய அரசு – உயர்மட்ட நிர்வாகம்**

- குடியரசுத்தலைவர்
- துணைக் குடியரசுத்தலைவர்
- அமைச்சரவைச் செயலகம்
- இந்தியத் தேர்தல் ஆணையம்
- ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம்
- தேசிய மனித உரிமைகள் ஆணையம்
- இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி)
- இந்தியக் கணக்கு தணிக்கை துறை
- நிதி ஆயோக்
- தேசிய மகளிர் ஆணையம்
- தேசிய பழங்குடி மக்கள் ஆணையம்
- பதினைந்தாவது நிதி ஆணையம்
- சிறுபான்மையோர் தேசிய ஆணையம்
- காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்
- முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆணையம்

### பிரதமர் அலுவலகம் (PMO)

பல்வேறு வகை ஆதார அலுவலர்கள் பிரதமருக்கு அறிக்கைகள் அளிக்க வேண்டியுள்ளதால், பிரதமர் அலுவலகம் என்பது அவரின் கீழ் பணிபுரியும் அத்தகைய பல்வேறு அலுவலர்களை உள்ளடக்கியது. பிரதமர் அலுவலகம் முதன்மைச் செயலரின் கீழ் செயல்படுகிறது. 1977 ஆம் ஆண்டு வரை பிரதமர் அலுவலகம் பிரதமரின் செயலகம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் மொரார்ஜி தேசாய் காலத்தில் பிரதமர் அலுவலகம் என்று மாற்றப்பட்டது.

## தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம்

தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நவம்பர் 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவற்றின் பணிகள்:

- படைப்பாக்க செயல்பாடுகள் மற்றும் பன்முனைச் செயல்பாடுகளுக்கான ஆதார அமைப்புகளை உருவாக்கும் வகையில் அறிவியல்சார் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் உத்திகளை உருவாக்குவது.
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழில் அமைப்புகளுடன் இணைந்து உள்கட்டமைப்பு பொருளாதார மற்றும் சமூகம் போன்ற முக்கியத் துறைகளில் அறிவியல் தொழில்நுட்ப இலக்குகளை நிர்ணயித்தல்.
- பிரதமரின் அறிவியல் தொழில்நுட்ப ஆலோசனை குழுவிற்கும் தனது பங்களிப்பை வழங்குதல்.
- தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நிர்வாக ரீதியாக ஆகஸ்ட் 2018 முதல் அமைச்சகச் செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பிரதமர் அலுவலகம் பிரதமருக்கு செயலக ரீதியான உதவிகளை வழங்குகின்றது. இதன் தலைவர் பிரதமரின் முதன்மைச் செயலர் ஆவார். பிரதமர் அலுவலகம் ஊழல் எதிர்ப்பு பிரிவு மற்றும் பொதுமக்கள் குறை கேட்டல் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியது. இவ்வலுவலகம் பிரதமர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில குடிமைப் பணி அலுவலர்கள் துணையுடன் அரசை ஒருங்கிணைக்கின்றது. மேலும், பிரதமர் பிரதம அலுவலக உதவியுடன் தான் அனைத்து அமைச்சகங்கள், ஆளுநர்கள் மற்றும் மாநிலங்களுடன் ஆலுவல்பூர்வ தொடர்பில் இருக்கிறார்.

## 6.3 பணியாளர் நிர்வாகம்

### பணியாளர் நிர்வாகம் – கருத்துரு:

அரசின் செயல்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகளின் அதிகரிப்பால் நிர்வாகக் கட்டமைப்பு பெருகிக்கொண்டே இருக்கிறது. இக்காரணிகளினால் ஒவ்வொரு நிலைகளிலும் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாளர்களின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பணியாளர் நிர்வாகத்தின் முக்கியப் பணி என்பது தொடர்ந்து ஒரு நிறுவனத்திற்குத் தேவையான மற்றும் தகுதி வாய்ந்த பணியாளர்களை வழங்குவதே ஆகும். பணியாளர் நிர்வாகத்தை புரிந்து கொள்வதற்கு அதன் பொருள் மற்றும் தன்மையை அறிந்து கொள்வது மிக அவசியம்.

### பணியாளர் நிர்வாகத்தின் நோக்கங்கள்:

- மனித வளத்தை திறம்பட பயன்படுத்துதல்.
- நிறுவனத்தின் அனைத்து பணியாளர்கள் இடையே ஆக்கபூர்வமான உறவுகளை உறுதி செய்தல்.
- அதிகபட்ச வளர்ச்சியை அடைதல்.
- நிறுவனத்தின் சமூக மற்றும் சட்ட ரீதியான கடமைகளை நிவர்த்தி செய்தல்.

### பணியாளர் நிர்வாகத்தின் பரப்பு மற்றும் எல்லை:

பணியாளர் நிர்வாகம் என்பது ஓர் அமைப்பில் உள்ள அனைத்து விதமான பணியாளர் மேலாண்மைகளை உள்ளடக்கியது. இதன் அடிப்படை நோக்கம் மனித வளத்தினை திறம்பட பயன்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களைத் திட்டமிட்டபடி அடைவதாகும். பணியாளர் நிர்வாகத்துறை ஓர் அமைப்பில் உறுப்பினர்களுக்கிடையே சரியான வகையில் உறவுகள் மேம்பட கட்டமைப்பை ஏற்படுத்துதல் வேண்டும். மேலும் பணியாளர்களிடையே வேலை செய்வதற்கான உந்துதல் அர்ப்பணிப்பு உணர்வு

மற்றும் விசுவாசம் போன்ற பண்புகளை வளர்த்தல் வேண்டும். பணியாளர்களின் சுய லாபம், பேராசை தேவையற்ற பகை உணர்வு ஆகியவற்றை அறவே நீக்குதல் வேண்டும். பணியாளர் நிர்வாகம், பணியாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்களிடம் சாதகமாக நடந்து கொள்ளுதல்(Nepotism) அவர்களிடம் பரிகாரம் பெறுதல் போன்றவற்றை அறவே ஒழித்தல் வேண்டும்.

**பணியாளர் நிர்வாகத்தின் பணிகள்:**

பணியாளர் நிர்வாகத்தின் முக்கிய பணிகள்

அ) மனித வளத்தை திட்டமிடுதல்.

ஆ) பணியமர்த்தல்

இ) பயிற்சி அளித்தல்

ஈ) பதவி உயர்வு

உ) ஊதிய கட்டமைப்பு

ஊ) பணியாளர் நலம்

### 6.3.1 குடிமைப் பணிகள் – பொருள் மற்றும் சிறப்பியல்புகள்

சுதந்திரமான, நிலையான பாகுபாடற்ற குடிமைப் பணியின் நல் அம்சங்கள் வருமாறு

அ) நம்பகமான பணியாளர் நியமனத்தில் ஊழல் பேர்வழிகள் மற்றும் சொந்த பந்தங்களை நியமிப்பதை தவிர்க்கின்றது. அழுகிய நிர்வாகத்தில் பாகுபாடுகள், முறைகேடுகள், ஊழல்கள் மலிந்துள்ளன.

ஆ) தற்காலத்தில் கொள்கை உருவாக்கம் என்பது ஆழமான அறிவும், பொது விவகாரத்தில் நிபுணத்துவமும் கோருவதாக உள்ளது. நிரந்தரமான குடிமைப் பணி மூலம் கொள்கை உருவாக்கத்தில் தொடர் நினைவாற்றலும், திறன் கட்டுதலும் நிறுவனமயப்படுத்துகிறது.

இ) நிரந்தரமான பாகுபாடற்ற குடிமைப் பணியால் மட்டுமே நீண்ட கால சமூக நலன் இலக்குகளை திட்டமிட்டு அடைய முடியும். அரசியல்வாதிகள் பெரும்பாலும் அரசியல் லாபம் கருதி குறுகிய கால சமூக நலன் திட்டத்திற்கே முன்னுரிமை அளிப்பர்.

ஈ) நிலையான குடிமைப் பணி பெரிய நாடுகள் மற்றும் பல்வேறு கலாச்சாரங்கள் உடைய நாடுகளின் ஒருங்கிணைப்பில் முக்கிய பங்களிக்கின்றது. மேலும் நாடு முழுவதும் சீரான பொது நிர்வாகத்தை வழங்க இயலும்.

உ) நிலையான குடிமைப் பணி இதர நம்பகத்தன்மை கொண்ட தொழில்கள் போன்றே நாளடைவில் தனது செயல்பாடுகளுக்கு அற ரீதியான நெறிகளை உருவாக்கிக் கொள்ளும்.

**குடிமக்கள் மற்றும் அதிகாரவர்க்கம்:**

மக்களாட்சியின் அடிப்படை குடிமக்களே ஆவர். பண்டையக் காலத்தில் ஒரு நாட்டின் முக்கியப் பணி எதிரிகளிடம் இருந்து எல்லையைப் பாதுகாத்தல், உள்நாட்டு அமைதி மற்றும் தயார்நிலை என மூன்றடுக்கு கொண்டதாக மட்டுமே இருக்கும். அக்காலக்கட்டத்தில் அதிகாரவர்க்கத்தின் பணிகள் கட்டுக்குள்ளாகவும், வாளின் வலிமை அதிகாரமிக்கதாகவும் இருக்கும். நில உறவுகள் சிக்கலடைந்து ராணுவத்துடன் பெரிய அதிகாரவர்க்கமும் தேவைப்பட்டது. தற்போதைய நவீன காலக்கட்டத்தின் அதிகாரவர்க்கத்தின் பணிகள் மேலும் பன்மடங்கு அதிகரித்துள்ளன. 20ஆம் நூற்றாண்டில் பொதுமக்களின் திறன்களுக்கு வாய்ப்பளித்தல், துன்பங்களை நீக்குதல் போன்றவை நாகரிக அரசின் முத்திரைகளாக ஆகின. சுயமரியாதை, சமவாய்ப்புகள், நீதி ஆகியன அதிகாரவர்க்கத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது.

இந்தியா மக்களாட்சி என்ற போதிலும் அதிகமாக மையப்படுத்தப்பட்ட ஒரு அரசு ஆகும். நூறு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டில் மிகக் குறைவான நபர்களே முக்கியமான முடிவுகளை எடுக்கும்

நிலையில் உள்ளனர். இவ்வாறன கட்டமைப்பில் பி.எம்., சி.எம்., டி.எம். அறிகுறிகள் இன்னமும் நமது அமைப்பையும் மக்களின் உளவியலையும் ஆட்டிப்படைப்பதாக உள்ளது.

வாக்குக்கும் பொது நலனுக்கும் தொடர்பு இல்லாத நிலை முழுமையாக உருவாகியுள்ளது. தொலைதூர, மையப்படுத்தப்பட்ட அரசால் மக்களுக்கு இன்றியமையாத தேவைகளான குடிநீர், சுகாதாரம், கல்வி, உடல் நலம், மின்சாரம், சாலைகள், போக்குவரத்து, வேளாண்மை உற்பத்தி, சந்தை இணைப்பு, கூடுதல் மதிப்பு, திறன் மேம்பாடு உள்ளிட்ட முக்கிய தேவைகளை நிறைவேற்றித் தரும் மன உறுதியோ தகுதியோ இல்லாமல் இருக்கிறது.

மாவட்ட ஆட்சியரே ஆட்சி அதிகாரத்தின் உருவகமாக இருக்கிறார். இதனால் அவ்வப்போது அரசுகள் மாறினாலும் அரசு சேவைகளின் தரத்தில் எவ்வித மாறுதலும் காணப்படவில்லை. அரசியல் என்பது ஆட்சி அதிகார விளையாட்டாகவும் அதிகாரம் என்பது தனிப்பட்ட நலன்களுக்கானதாகவும் மாறியுள்ளது. வாக்கு என்பது விலை கொடுத்து வாங்கத்தக்க நுகர்பொருளாகவோ அல்லது எந்த விளைவுகளும் அற்ற பண்டமாற்றாகவோ மாறிவிட்டது. மக்களாட்சி என்பது அதிகாரத்துக்கான தேர்தல் போட்டி என்பதாகவும், தேர்தல் என்பது மக்கள் நலனுக்கானதாக அல்லாமல் போட்டியிடுவோரின் சுய நலனுக்கானதாகவும் சுருங்கி விட்டது. வரி செலுத்தும் சாமானியர் மூல வளங்களைப் பயன்படுத்தும் வழி வகைகளோ, அதற்கான உரிமைக் குரலோ அற்றவர்களாக உள்ளனர். தொலைவில் இருந்து இயக்கப்படும் அதிகாரவர்க்கம் தாம் யாருக்காகப் பணியாற்றுகிறதோ அந்த மக்களுக்குக் கடமைப்பட்டதாக இல்லை.

**குடிமைப் பணியினை குடிமக்கள் மையப் பணியாக மாற்றுவதற்கான முக்கிய கொள்கை நெறிகள்**

1. சட்டத்தின் ஆட்சி
2. நிறுவனங்களை பொறுப்புணர்வும் கடமைப்பாடும் உள்ளவையாக மாற்றுதல்.
3. குடிமக்களின் ஆக்கப்பூர்வ பங்களிப்பு – அதிகாரபரவலாக்குதல் மற்றும் பிரதிநிதித்துவம்.
4. வெளிப்படைத்தன்மை
5. குடிமைப் பணிச் சீர்த்திருத்தம்
6. ஆளுகையில் அறநெறி
7. தொடர்ச் சீர்திருத்தம்

### 6.3.2 அனைத்து இந்தியப் பணிகள், மத்தியப் பணிகள் மற்றும் மாநிலப் பணிகள்

இந்திய நிர்வாக அமைப்பின் தனிச்சிறப்பு என்னவெனில். இப்பணிகள் மத்திய–மாநில அரசுப் பணிகளுக்கும் பொதுவான இந்திய ஆட்சிப் பணி உருவாக்கப்பட்டதாகும். மத்திய, மாநில அரசுகள் இரண்டிலும் இல்லாத நிர்வாகப் பணியாளர்களைக் கொண்டது இது. இவர்கள் எந்த நேரத்திலும் எந்த அரசுப் பணிக்கும் மாற்றப்படலாம். இந்த அலுவலர்கள் அனைத்து இந்திய அளவில் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், பொது தகுதியும் ஒரேஊதிய விகிதமும் கொண்டவை. இவர்கள் ஊதியம் மாநிலத்துக்கு மாநிலம் மாறுவதில்லை. ஒரு சீரான உரிமைகள், சன்மானங்கள் என ஒரு சீரான தகுதியுடன் ஒருசீரான பணி வடிவத்தினைப் பெற்றுள்ளது.

இதர கூட்டாட்சிகள் போன்றே இந்திய அரசமைப்பில் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் எனும் அடிப்படையில் பிரிக்கப்பட்டு தமக்கான அரசுப் பணிகளை நிர்வகித்து வருகின்றன. பாதுகாப்பு, வருமான வரி,அஞ்சல் மற்றும் இரயில் போக்குவரத்து ஆகியத் துறைகள் மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் வரும். இதற்கான பணியாளர்கள் மத்திய அரசின் கட்டுபாட்டில் வருவர். இதே போன்று, மாநில அரசு தனக்கென தனியான துறைகளைக் கொண்டுள்ளது.

### அனைத்து இந்தியப் பணிகள்




அனைத்து இந்தியப் பணிகள் மத்திய மாநில அரசுகளுக்குப் பொதுவாக உருவாக்க வேண்டும் என அரசமைப்பு விதிகள் கூறுகிறது. அனைத்து இந்தியப் பணிகள் சட்டம் 1951 மூலம் அனைத்து இந்தியப் பணிகளுக்கான நியமன விதிமுறைகள் மற்றும் பணி நிலைமை குறித்து மத்திய அரசு விதிமுறைகளை உருவாக்கலாம். தற்போது இந்தியாவில் மூன்று அனைத்து இந்திய பணிகள் உள்ளன. அவைகள் முறையே இந்திய ஆட்சிப் பணி (IAS), இந்தியக் காவல் பணி(IPS) மற்றும் இந்திய வனப் பணி(IFS). இ.ஆ.ப/இ.கா.ப/இ.வ.ப பதவி உயர்வு விதிகளின் படியே அனைத்து இந்தியப் பணிகள் கிளை கடைப்பிடிக்கிறது.

### அனைத்து இந்தியப் பணி விதிமுறைகள் அடிப்படையில் இருவழிகளில் நியமிக்கப்படுகின்றனர்.

இரண்டு வழிமுறைகளில் அகில இந்தியப் பணிக்கு பணியமர்த்தப்படுகின்றன.

i. **நேரடி நியமனம்:** ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்தும் குடிமைப் பணிகள் தேர்வுகள் மூலம் செய்யப்படுகின்றது.

ii. **பணி உயர்வு:** அரசுத் துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளை பதவி உயர்வு அடிப்படையில் அனைத்து இந்தியப் பணிக்கு தேர்வு செய்தல்.

### இந்திய ஆட்சிப் பணி(IAS):

இந்திய ஆட்சிப் பணி என்பது இந்திய குடிமைப் பணியிலிருந்து தோன்றியதாகும். அனைத்து இந்தியப் பணி எனும் அளவில் இறுதியில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வந்தாலும் உடனடியாக அவர்களின் எஜமான் மாநில அரசுதான். இந்த அலுவலர்களுக்கான ஊதியம், ஓய்வூதியம் மாநில அரசால் வழங்கப்படும். ஆனால் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம், அபராதம் விதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடமே உள்ளது. இது, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணைய ஆலோசனையின்படி வழிநடத்தப்படுகிறது. மாநிலப் பிரிவின் எண்ணிக்கை முடிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் பணி நியமனத்தின் போதே மாநிலப் பிரிவுகளாக நியமிக்கப்படுகிறார்கள். இருப்பினும், ஒன்று அல்லது இரண்டு பணிக்காலங்கள் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த மாநிலப் பிரிவு அலுவலர்கள் மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்பட முடியும். பெரும்பாலான அனைத்து இந்தியப் பணியாளர்கள் பணிக்காலத்தில் ஒரு முறையாவது மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்படும் வாய்ப்பு உள்ளது. பலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளும் இவ்வாய்ப்பு கிடைக்கின்றன. மூத்த அதிகாரிகளை செயலகத்துக்கு உள்ளும் வெளியிலும் மாற்றும் நடைமுறை அதிகாரபூர்வ நிறுத்தம் என்று அழைக்கப்படுகிறது.




இது மத்திய மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பணியைச் சார்ந்த அதிகாரியின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் மாநில அரசால் வழங்கப்படும். ஆனால், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனையின் பெயரில் மத்திய அரசால் மட்டுமே எடுக்க முடியும். இவ்வதிகாரிகள் நியமனம் செய்யப்படும் போது, மாநில

அடிப்படையில் அவர்களுக்கு பணி ஒதுக்கப்படுகின்றது. மாநிலங்களில் பணிபுரியும் இவ்வதிகாரங்களில் மத்திய அரசிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதவி (Tenure) காலத்திற்கு பணிபுரியலாம். ஒரு பதவிக்காலம் என்பது மூன்று அல்லது நான்கு அல்லது ஐந்து ஆண்டாக இருக்கலாம்.

இந்திய ஆட்சிப் பணி பன்முகத் தன்மைக் கொண்டது. இப்பணியில் அமர்த்தப்படும் அதிகாரிகள் பல்வேறுபட்ட பணிகளை மேற்கொள்வார்கள். உதாரணமாக, சட்டம் ஒழுங்கு, வரிவசூல், வியாபாரங்களை ஒழுங்குமுறை செய்தல், வாணிபம் மற்றும்

## குடிமைப் பணி தேர்வுக்கான தற்போதைய முறை

**இப்பணிக்கான போட்டி தேர்வு மூன்று தொடர்ச்சியான கட்டங்களைக் கொண்டுள்ளது.**

அ) குடிமைப் பணி (முதல் நிலை ) தேர்வு

ஆ) குடிமைப் பணி (முதன்மை) தேர்வு, மற்றும்

இ) நேர்முகத் தேர்வு

**அ) குடிமைப் பணி (முதல் நிலை ) தேர்வு**

இத்தேர்வு இரண்டு தாள்களை கொண்டுள்ளது. அவ்விரண்டிலும் தேர்ச்சி பெறுவது கட்டாயம். ஒவ்வொரு தாளுக்கும் தலா 200 மதிப்பெண்கள்.

i. கொடுக்கப்பட்டிருக்கும் பல விடைகளுள் ஒன்றை தேர்வு செய்யும் விதத்தில் இரண்டு தேர்வுகளும் அமைந்திருக்கும். இரண்டு தாள்களுக்கும் தலா இரண்டு மணித்துளிகள் வழங்கப்படும்.

ii. குடிமைப் பணி தேர்வில் CSAT தேர்வு ஒரு தகுதித் தேர்வாகும். அதில் குறைந்தபட்சம் 33% மதிப்பெண் பெறுவது அவசியமாகும்.

iii. கேள்விதாள்கள் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் அமைக்கப்பட்டிருக்கும்.

**ஆ) குடிமைப் பணி (முதன்மை) தேர்வு.**

முதன்மை எழுத்துத்தேர்வானது கீழ்கண்ட தாள்களை கொண்டிருக்கும்.

**இரண்டு தேர்ச்சி தாள்கள்**

**தாள்–அ**

(அரசமைப்பின் எட்டாவது அட்டவணையில் கூறப்பட்டுள்ள ஏதாவது ஒரு இந்திய மொழியினை தேர்வு எழுதுபவர் தேர்ந்தெடுக்க வேண்டும்) **300 மதிப்பெண்கள்**

**தாள்–ஆ**

❖ ஆங்கிலம்

❖ தகுதியடிப்படையில் கணக்கிடப்படும் மதிப்பெண்கள்

**தரவரிசைக்கான ஏழு தாள்கள்**

**தாள்–1**

❖ கட்டுரை **250 மதிப்பெண்கள்**

**தாள்–2**

❖ பொதுத் தாள் -1 (இந்திய மரபு மற்றும் கலாச்சாரம், சமூக மற்றும் உலக வரலாறு மற்றும் புவியியல்) **250 மதிப்பெண்கள்**

**தாள்–3**

❖ பொதுத் தாள் -2 (ஆட்சி, அரசியலமைப்பு, அரசியல், சமூக நீதி மற்றும் சர்வதேச உறவுகள்) **250 மதிப்பெண்கள்**

**தாள்–4**

❖ பொதுத் தாள் -3 (தொழில்நுட்பம், பொருளாதார மேம்பாடு, பல்லுயிர், சூழல், பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை) **250 மதிப்பெண்கள்**

**தாள்–5**

❖ பொதுத் தாள் -4 (அறநெறி, நாணயம் மற்றும் கூர்மதி) **250 மதிப்பெண்கள்**

**தாள்–6**

❖ விருப்பப் பாடம் – தாள் 1 **250 மதிப்பெண்கள்**

**தாள்–7**

❖ விருப்பப் பாடம் – தாள் 2 **250 மதிப்பெண்கள்**

❖ கூட்டுத்தொகை (எழுத்து தேர்வு) **1750 மதிப்பெண்கள்**

❖ ஆளுமை சோதனை **275 மதிப்பெண்கள்**

மொத்தம் **2025 மதிப்பெண்கள்**



12th_Political Science_Tamil_Unit_6.indd 152 04-06-2019 11:34:28

தொழில், மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சி பணிகள். காலனி ஆதிக்கக்கால குடிமைப் பணியை ஒப்பிடுகையில் நீதித்துறை சார்ந்த பணிகளை தவிர அனைத்து பணிகளையும் கையாளுகின்றனர். எனவே, இப்பணி பொதுமைப்பட்ட பணி என்றழைக்கப்படுகிறது. இப்பணியை சார்ந்த அதிகாரிகள் எந்த துறையிலும் பணியமர்த்தப்படலாம்.

### இந்தியக் காவல் பணி (IPS)



இந்தியக் காவல் பணியானது, சுதந்திர காலக்கட்டத்திற்கு முன்பே தோன்றியது. இப்பணி இந்திய ஆட்சிப்பணியிலிருந்து இரண்டு வழிகளில் வேறுபடுகிறது.

i) பெரும்பான்மையான அதிகாரிகள் மாநிலத்திலேயே பணிபுரிகின்றனர். ஏனெனில், மத்தியில் காவல் துறை சார்ந்த மிகச் சில பணிகளே உள்ளன.

ii) இவர்களின் ஊதியம் மற்றும் நிலை இந்திய ஆட்சிப் பணியைவிடக் குறைவானது.

இவர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இ.ஆ.ப(IAS), இ.கா.ப(IPS), இ.வ.ப(IFS) ஆகிய பதவிகளுக்கு பொதுவான ஒரு தேர்வின் மூலம் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கின்றனர். இந்தியக் காவல் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் ஐந்து மாத அடிப்படைப் பயிற்சி பெற்ற பின்னர், சர்தார் பட்டேல் தேசிய காவல் பயிற்சி நிலையத்தில் (ஹைதராபாத்) சிறப்புப் பயிற்சி பெறுகின்றனர். குற்ற உளவியல், குற்றங்களை கண்டுணர்தல், ஊழல் தடுப்பு மற்றும் பேரிடர் கால செயல்பாடுகள் ஆகியவற்றில் பயிற்சி பெறுகின்றனர். அவர்களுக்கான பாடத்திட்டம் குற்ற உளவியல், குற்றங்களைத் தடுப்பதற்கான அறிவியல் உபகரணங்களைக் கையாள்வது, ஊழலைத் தடுப்பதற்கான முறைகள், நெருக்கடிகால நிவாரணங்களைக் கற்றல் ஆகியன உள்ளடக்கியதாக இருக்கும். ஓராண்டு பயிற்சியை நிறைவுசெய்த பின்னர் தகுதிகாண் நிலையினர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். பின்னர் அந்த நபர் காவல்துறை உதவி கண்காணிப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஆனால், இதற்கு முன் அவர் ஓராண்டு பயிற்சி நிரலை நிறைவு செய்தாக வேண்டும். இக்கால கட்டத்தில் ஓர் இளநிலை அதிகாரி மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சி நிறைவுற்ற பின் உதவிக் காவல் கண்காணிப்பாளராக (ASP) பணியில் அமர்த்தப்படுகின்றனர்.

இந்தியக் காவல் பணி ஓர் அனைத்து இந்தியப் பணி என்பதால் அவர்கள் மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றனர். அதே நேரம் மாநில பதவி நிலைகளில் அமர்த்தப்படுகின்றனர். இந்தியக் காவல் பணியானது, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் மேற்பார்வையிடப்படுகிறது. இருப்பினும், பணியாளர் கொள்கைகள் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தங்களின் மூலமே வரையறை செய்யப்படுகிறது.


### இந்திய வனப் பணி

விடுதலைக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஒரே அனைத்து இந்தியப் பணி இந்திய வனப் பணி ஆகும். நாடாளுமன்ற சட்டம் 1963இன் கீழ் இது நடைமுறைக்கு வந்தது. இதன் ஊதியம் மற்றும் பணி தகுதி மற்ற இரு பணிகளுக்கும் –(இ.ஆ.ப., இ.கா.ப.,) கீழானவை ஆகும். இதற்கான தேர்வுகள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தனியாக நடத்தப்படும்; அவை, எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு என இரு நிலைகளைக் கொண்டவை. இது அனைத்து இந்தியப் பணி



12th_Political Science_Tamil_Unit_6.indd 153 04-06-2019 11:34:29

என்றபோதிலும் அதன் தன்மை பொதுவான குடிமைப் பணி போன்றதே. ஆனாலும், தனிச்சிறப்பு ஆக்கப்பட்டதும், அதிகாரம் கொண்டதுமாக இருக்கிறது. இப்பணிகள் பணியாளர் மற்றும் சீர்திருத்தத்துறை மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. அனைத்து இந்தியப் பணிகளுக்கான நியமனம், ஒழுங்குமுறைகள், பணி நிலைகள் ஆகியனவற்றை இத்துறையே உருவாக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




நியமனம் பெற்ற நபர்கள் இதர அனைத்து இந்திய மத்தியப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட நபர்களுடன் மூன்று மாத அடிப்படைப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அடிப்படை பயிற்சிகளை நிறைவு செய்த பின்னர் தகுதிகாண் நிலை பயிற்சிகளை டேராடூனில் உள்ள இந்திய வனத் துறை பயிற்சி மையத்தில் இரண்டு ஆண்டுகள் மேற்கொள்ள வேண்டும். அங்கு கடுமையான பயிற்சிகள் அளிக்கப்படும். பயிற்சியைத் தொடர்ந்து அதற்கான தேர்விலும் தேர்ச்சி பெற்ற பின்னரே பணி ஒதுக்கப்படும். அனைத்து இந்தியப் பணிகள் போன்றே இந்திய வனப் பணிகளும் பிரிவு அடிப்படையிலான பணி ஆகும். மத்திய பணிகளில் ஓராண்டு மாற்றுப்பணியாளராக பணி செய்த பின்னர் அவரவர் பிரிவு மாநிலங்களுக்கு அனுப்பப்படுவர்.

பிற அனைத்து இந்தியப் பணிகள் போல் இல்லாமல் மத்திய குடிமைப் பணிகள் மத்திய அரசின் தனிக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. இதன் உறுப்பினர்கள் மத்திய அரசில் இருந்தே நியமிக்கப்படுகின்றனர். மத்திய அரசின் குடிமைப் பணிகள் நிறுவப்பட்ட பணிகளான மத்திய குடிமைப் பணிகளும் நிறுவப்பட்ட குடிமைப் பணிகளுக்கு வெளியில் உருவாக்கப்படும் குடிமைப் பணிகளையும் உள்ளடக்கியது ஆகும்; இவை பொது மத்தியப் பணிகளாகத் தொகுக்கப்பெறுகின்றன. இவை இரண்டுமே பிரிவுகள் 1,2,3 மற்றும் 4 என கீழிறக்க நிலை பணிநிலையிடங்களைக் கொண்டுள்ளன.

இரண்டு குடிமைப் பணிகளுக்கும் நியமன அதிகார அமைப்பு ஒன்றுதான் என்பதால் அனைத்து இந்திய பணிகள், மத்திய குடிமைப் பணிகள் என இரு பிரிவுகள் வகைப்படுத்தல் ஏன் எனக் கேட்கலாம். ஆனால், ஒரே ஒரு முக்கிய வேறுபாடு காணப்படுகிறது. அது என்னவென்றால், அனைத்து இந்திய பணிகளின் கீழ் மத்திய அரசு, மாநில அரசுகள் இரண்டின் கீழும் பணியாற்ற நேரிடும். மேலும், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் எந்த பணிக்கும் நியமிக்கப்படலாம். ஆனால், மத்திய அரசு பொதுப் பணிகள் குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே நியமிக்கப்படுகின்றன. இதன் மூலம் வேறுபாடு நியாயப்படுத்தப்படுகிறது,

### பணி அமர்த்தல்

மத்திய அனைத்து இந்தியக் குடிமைப் பணித் தேர்வுகளால் வகுப்பு I மற்றும் II சார்ந்த அதிகாரிகள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்படுகின்றனர்.

### இந்திய வெளியுறவுப் பணிகள்

மத்திய குடிமைப் பணிகள் வகுப்பு 1 – பிரிவின்கீழ் வரும் இந்திய வெளியுறவுப் பணிகள் நாட்டு விடுதலைக்குப் பின்னர் உருவாக்கப்பட்டவை ஆகும். இப்பணிகள் முழுமையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வருபவை. அனைத்து இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுகளில் மேல் நிலைத் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மத்தியக் குடிமைப் பணிகளிலேயே மிக உயர்ந்த கவுரவமும், தகுதிநிலையும், ஊதியமும், ஆதாயமும் கொண்டவை இந்திய வெளியுறவுப் பணிகள் ஆகும். இப்பணிகளில்


12th_Political Science_Tamil_Unit_6.indd 154 04-06-2019 11:34:29

நியமிக்கப்படுபவர்கள் உள்நாட்டிலும் அயல் நாடுகளின் தூதரகங்களிலும் பணியாற்றக் கடமைப்பட்டவர்கள். இத்துறை இந்திய வெளியுறவு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்திய வெளியுறவுப் பணியாளர்கள் நிர்வாகத்தில் மத்தியப் பணியாளர் துறையும் பங்கெடுக்கிறது. மத்திய நிதி அமைச்சத்தின் பணியாளர்களையும் நிர்வகிக்கும் இத்துறை வெளியுறவுப் பணியாளர்களின் பணி வரைகளையும் ஊதிய அலகுகளையும் இதர நிதி அம்சங்களையும் வரையறை செய்கிறது. சலுகைகள், படிகளைப் பொறுத்தவரையில் இதர துறைப் பணியாளர்களைவிட வெளியுறவுப் பணியாளர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் ஆவர்.

அன்னிய நாட்டுப் படிகள் பெற இவர் தகுதியானவர்கள். இது கீழ்க்காணும் நிலைகளில் வழங்கப்படுகின்றன: அ) உள்ளூர் வாழ்க்கைச் செலவு ஆ) இதர தேவையான செலவுகளுக்கான படிகள் அவர்கள் உள்நாட்டில் பணியாற்றினாலும் அயல் நாட்டில் பணியாற்றினாலும் உள்நாட்டில் அவருக்கு நிகரான பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்க்களுக்கு அனுமதிக்கப்பட்ட விதத்திலேயே அனுமதிக்கப்படும்; கூடுதல் செலவினங்களைப் பணியாளர்களே ஏற்க வேண்டும். இ) அயல்நாடுகளின் பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்களின் பிரதிநிதித்துவ செலவினங்கள் அயல் நாடுகளில் ஒரு தனியாக எதிர்கொள்ளும் வீதத்திலேயே அவரது அலுவலக நிலைத் தகுதியினால் வழங்கப்படும்.

இந்திய வெளியுறவுப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மூன்று ஆண்டுகள் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்கு அவர் ஒரு மாவட்டத்தோடு இணைக்கப்பட்டு நடைமுறைப்பணிகளில் பயிற்சி மேற்கொள்வார். மேலும், செயலகப் பயிற்சியும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பெற வேண்டும்.

### 6.3.3 ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் – அமைப்பு, அதிகாரங்கள், பணிகள் மற்றும் விதிகள்




#### வரலாற்றுப் பார்வை

இந்தியாவில் அரசு பணியாளர் தேர்வாணையம் உருவாவதற்கான வித்து எப்போது நடப்பட்டது என்றால் 1919 மார்ச் 5 அன்று இந்திய அரசமைப்பு சீர்திருத்தப்பட்ட நாளை குறிப்பிடலாம். அப்போது அரசு அறிவித்த முதல் சீர்திருத்தங்களில் சில நிரந்தரமான அரசு பணிகளுக்கு ஒழுங்குமுறைகளுடன் கூடிய நியமன முறையின் தேவை உணரப்பட்டு, இதற்கான நிரந்தர பணி ஆணைய அமைப்பினை உருவாக்கப் பரிந்துரைக்கப்பட்டது. இதன்படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்க இந்திய அரசாங்கச் சட்டம், 1919 உறுப்பு 96(சி) வழிவகுத்தது. இதன்படி ஆளுநர்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு செயலர் உருவாக்கும் விதிகளின்படி இந்திய அரசு பணியாளர்கள் நியமனங்களும் கட்டுப்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அச்சட்டம் தெளிவுபடுத்தியது.

சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தேர்வாணையம் அமைப்பு, செயல்பாடுகள், குறித்து பல மட்டங்களில் தொடர் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. தொடர்ந்து தீர்வுகாண லீ ஆணையம் என அழைக்கப்படும் ராயல் ஆணையம் உருவாக்கப்பட்டது. லீ ஆணையம் தமது அறிக்கையை 1924இல் வழங்கியது. ஒரு சட்டப்பூர்வ அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசாங்கச் சட்டம், 1919–இன் படி தாமதமின்றி உருவாக்கப்பட வேண்டும் என ஆணையம் ஆணையிட்டது.



12th_Political Science_Tamil_Unit_6.indd 155 04-06-2019 11:34:29

இந்திய அரசாங்கச் சட்டம் 1919 உறுப்பு 96(சி) படியும், உடனடியாக தேர்வாணையம் அமைக்க லீ ஆணையம் ஆணையிட்டதன் படியும் இந்தியாவில் முதல் முறையாக அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் 01. 10. 1926ல் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் ஒரு தலைவரும் நான்கு உறுப்பினர்களும் கொண்டிருந்தது. ஐக்கிய ராஜ்ஜியத்தின் உள்துறை குடிமைப் பணிகள் உறுப்பினர் சர்ராஸ் பார்க்கர் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்திய அரசாங்கச் சட்டம், 1919, உறுப்பு 96(சி)துணைப்பிரிவு(2)ன்கீழ்வழங்கப்பட்டுள்ள விதிகளின் படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் (பணிகள்) விதிகள், 1926 உருவாக்கப்பட்டது. இந்திய அரசாங்கச் சட்டம், 1935 மேலும் விரிவு படுத்தப்பட்ட கூட்டாட்சி (மத்திய) மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் உருவாக வழிவகுத்தது. இதன்படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் கூட்டாட்சி (மத்திய) பணியாளர் தேர்வாணையமாக 01. 04. 1937ல் மாறியது.

இந்திய அரசமைப்பு செயல்முறைக்கு வந்த ஜனவரி 26, 1950 அன்று கூட்டாட்சி பணியாளர் தேர்வாணையம் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் என பெயர் மாற்றப்பட்டது. அரசமைப்பு உறுப்பு 378 (1)ன் கீழ் கூட்டாட்சி பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்களாக ஆனார்கள்.

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசமைப்பு உறுப்பு 315இன்படி உருவாக்கப்பட்ட அரசமைப்பு நிறுவனம் ஆகும். தேர்வாணையம் ஒரு தலைவர், 10 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு ஆகும். போட்டித்தேர்வுகள், நேர்முகத் தேர்வுகள் மூலம் பணியாளர்கள் நியமனம், பதவி உயர்வு மற்றும் அயல்நாட்டுப் பணி மாறுதல்களுக்கான பொருத்தமான அறிவுரைகள் வழங்குவது, பல்வேறு அரசு பணிகள் நியமனங்கள் குறித்து அரசு கோரும் ஆலோசனைகள் வழங்குவது, நியமன விதிகள் உருவாக்கம், திருத்தம் மேற்கொள்வது, பல்வேறு குடிமைப் பணிகளுக்கான நடத்தை விதிகள் உருவாக்குவது, கூடுதல் சிறப்பு நிலை ஓய்வூதியம், வழக்குச் செலவுகள் அளித்தல் போன்ற விவகாரங்களில் ஆலோசனை வழங்குவது, விளக்கம் கோரி குடியரசு தலைவராலும் மாநில அரசுகளின் ஆளுநர்களும் அனுப்பப்படும் விவரங்களுக்கு ஆலோசனைகள் வழங்குவது, தவிர பணி நியமனம் தொடர்பாக அரசு கோரும் அனைத்து விவரங்களையும் வழங்குவது ஆகிய பணிகளை தேர்வாணையங்களுக்கு அரசமைப்பு பொறுப்பளித்துள்ளது.

அரசமைப்பு பொறுப்பளித்துள்ள அனைத்துக் கடமைகளையும் ஆற்ற ஒரு செயலர் தலைமையில் எண்ணற்ற அலுவலர்கள் / ஊழியர்களைக் கொண்ட ஒரு செயலகம் மூலம் தேர்வாணையங்கள் இயங்குகின்றன. ஆணைய செயலகத்தின் நிர்வாகச் செயல்பாடுகளுடன் ஆணையத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஆணைய அலுவர்கள்/ ஊழியர்கள் தொடர்பான அனைத்துப் பணியாளர் விவகாரங்களையும் ஆணைய நிர்வாகப் பிரிவு மேற்கொள்ள வேண்டும்.

### ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டப்பூர்வ கடமைகள்

இந்திய அரசமைப்பு உறுப்புகள் 320, 321இன் படி வழங்கப்பட்டுள்ள ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டப்பூர்வ கடமைகள் வருமாறு

1. போட்டித் தேர்வுகள் மூலம் நியமனங்கள்
2. நேர்காணல்கள் மூல நியமனங்கள்
3. பதவி உயர்வு மற்றும் அயல்நாட்டுப் பணி மாறுதல்களுக்கான பொருத்தமான அறிவுரைகள் வழங்குதல்
4. பல்வேறு அரசு பணிகள் நியமனங்கள் குறித்து அரசு கோரும் ஆலோசனைகள் வழங்குவது, நியமன விதிகள் உருவாக்கம், திருத்தம் மேற்கொள்வது, பல்வேறு



12th_Political Science_Tamil_Unit_6.indd 156 04-06-2019 11:34:29

குடிமைப் பணிகளுக்கான நடத்தை விதிகள் உருவாக்குவது,

5. பல்வேறு குடிமைப் பணிகள் தொடர்பான ஒழுங்கு நடவடிக்கைகள்

6. கூடுதல் சிறப்பு நிலை ஓய்வூதியம், வழக்குச் செலவுகள் அளித்தல்

7. குடியரசுத்தலைவரால் தேர்வாணையத்துக்கு அனுப்பப்படும் அனைத்து விவகாரங்கள் குறித்தும் ஆலோசனைகள் வழங்குவது

8. பணி நியமனம் தொடர்பாக அரசு மற்றும் மாநில ஆளுநர்கள் கோரும் அனைத்து விவரங்களையும் வழங்குவது

**நியமனங்கள் கீழ்க்காணும் நான்கு வழிகளில் ஒன்றில் மேற்கொள்ள வேண்டும்**

1. நேரடி நியமனம்
2. பதவி உயர்வு
3. இந்திய வெளியுறவுப் பணி / இணைப்பு
4. இரண்டும் இணைந்த முறை (வெளியுறவுப் பணி + இணைப்பு)

**நேரடி நியமனம்**

நேரடி நியமனங்கள் பெரும்பாலும் கீழ்க்காணும் இரு வழிகளில் நடைபெறுகின்றன

1. போட்டித் தேர்வுகள் மூலம்

2. தேர்வு மூலம் பல்வேறு குடிமைப் / பாதுகாப்புப் பணிகளுக்கு நாட்டின் பல இடங்களில் அமைந்துள்ள தேர்வு மையங்களில் கீழ்க்காணும் தேர்வுகளை ஆணையம் நடத்துகிறது.

i. குடிமைப் பணிகள் (அடிப்படை நிலை) தேர்வு

ii. குடிமைப் பணிகள் (முதன்மை நிலை) தேர்வு

iii. பொறியியல் பணிகள் தேர்வு

iv. ஒருங்கிணைந்த மருத்துவப் பணிகள் தேர்வு

v. இந்திய வனப் பணிகள் தேர்வு

vi. நிலவியலாளர் தேர்வு

vii. இந்திய பொருளியல் பணிகள் / இந்திய புள்ளியியல் பணிகள் தேர்வு

viii. சிறப்பு நிலை ரயில்வே பயிற்சியாளர் தேர்வு (ஒரு ஆண்டு விட்டு ஒரு ஆண்டு)

ix. ஒருங்கிணைந்த பாதுகாப்புப்படைகள் தேர்வு (ஆண்டு தோறும்)

x. தேசியப் பாதுகாப்பு அகாதமி, நேவல் (கடல் படை) அகாதமி தேர்வு (இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை)

xi. மத்தியக் காவல் படைகள் (உதவி கமாண்டென்ட்) தேர்வு

xii. பிரிவு அலுவலர் / சுருக்கெழுத்தர் (கிரேட் பி / கிரேட் 1)

xiii. துறைவாரி போட்டித் தேர்வுகள்

போட்டித் தேர்வுகள் கால அட்டவணை எம்பிளாய்மெண்ட் நியூஸ், ரோஜ்கர் சமாச்சார் இதழ்களில் வெளியாகிறது. எதிர்வரும் தேர்வுகளின் பெயர்கள், அறிவிப்பானை வெளியாகும் தேதி, விண்ணப்பிக்கும் கடைசி நாள், தேர்வு நாள் ஆகிய தகவல்கள் வெகு முன்பாக பெரும்பாலும் முந்தைய ஆண்டு அக்டோபர் மாதமே அறிவிக்கப்படுகிறது.

**பெண் விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக் கட்டணத்தில் இருந்து விலக்கு**

15. 07. 2009 வெளியான டி.ஓ.பி.டி கடிதம் எண் 36020/ 03/ 2009 படி ஆணைய தேர்வுகளுக்கான கட்டணத்தில் இருந்து பெண் விண்ணப்பதாரர்களுக்கு கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.



12th_Political Science_Tamil_Unit_6.indd 157 04-06-2019 11:34:29

| அரசமைப்பு உறுப்புகள் | |
|---|---|
| உறுப்பு 315 | ஒன்றிய, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் |
| உறுப்பு 316 | உறுப்பினர் நியமனம், பதவிக் கால வரம்பு |
| உறுப்பு 317 | தேர்வாணையம் உறுப்பினர் நீக்கம் மற்றும் இடை நீக்கம் |
| உறுப்பு 318 | தேர்வாணையம் உறுப்பினர்கள், ஊழியர்களுக்கான ஒழுங்குமுறைகளை உருவாக்குதல் |
| உறுப்பு 319 | நடவடிக்கைக்குள்ளாகும் உறுப்பினர்கள் பணியில் தொடர்வதைத் தடுத்தல் |
| உறுப்பு 320 | தேர்வாணையம் பணிகள் |
| உறுப்பு 321 | தேர்வாணையம் பணிகளை விரிவாக்கம் செய்யும் அதிகாரம் |
| உறுப்பு 322 | தேர்வாணையம் செலவினங்கள் |
| உறுப்பு 323 | தேர்வாணையம் அறிக்கைகள் |

### 6.3.4 மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்



மத்தியில் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருப்பதுபோல் ஒரு மாநிலத்தில் அரசுப் பணியாளர் தேர்வாணையமும் இயங்குகிறது. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைய வழிவகுத்த அரசமைப்பு உறுப்புகளே (315 முதல் 323 வரை) இதற்கும் வழி வகுக்கிறது. அமைப்பு, உறுப்பினர்கள் நியமனம், நீக்கம், அதிகாரம், பணிகள் மற்றும் சுதந்திரத்தன்மை அனைத்தும் அரசமைப்பு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களுக்கும் வழங்குகிறது.

#### அமைப்பு

ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆளுநரால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். ஆணையத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை அந்தந்த அரசுகளே நிர்ணயம் செய்துகொள்ள அரசமைப்பு அனுமதிக்கிறது. ஆனால், அது ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டது. மேலும், ஆணைய உறுப்பினர்களில் பாதி பேர் மத்திய மாநில அரசுகளின் நிர்வாகத்தில் 10 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்என்றநிபந்தனைதவிர உறுப்பினர்கள் தகுதி குறித்து அரசமைப்பு எதுவும் கூறவில்லை. மேலும் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிலைகள் குறித்து ஆளுநரே வரையறை செய்துகொள்ள அனுமதி வழங்குகிறது.

மாநிலஅரசுப்பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் அல்லது 62 வயது இதில் எது முந்தியதோ அது ஆகும். ஆனால் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் இந்த வயது



12th_Political Science_Tamil_Unit_6.indd 158 04-06-2019 11:34:29

வரப்பு 65 ஆகும். அதேநேரம் ஆளுநருக்கு முறைப்படி பதவி விலகல் கடிதம் அளிப்பதன் மூலம் பதவி விலக முடியும்.

கீழ்க்காணும் இரண்டு சூழ்நிலைகளில் தேர்வாணைய உறுப்பினர்களில் ஒருவரை தற்காலிக உறுப்பினராக ஆளுநர் நியமனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்:

அ. தலைவர் பதவி காலியாக இருக்கும் போது

ஆ. ஏற்கனவே தலைவர் பதவியில் இருப்பவரால் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அலுவல்களை நிறைவு செய்ய இயலாத சூழ்நிலை உருவாகும்போது. புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை அல்லது ஏற்கனவே பதவியில் இருக்கும் தலைவர் தனது அலுவல்களை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும் வரை தற்காலிக தலைவர் தலைவர் அலுவல்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்.

### நீக்கம்

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையதின் தலைவர், உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்ட போதும் குடியரசுத்தலைவரால் மட்டுமே ஒருவரை நீக்க முடியும் (ஆளுநரால் அல்ல). ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், உறுப்பினர்களை நீக்கும் முறையிலேயே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையதின் தலைவர், உறுப்பினர்களையும் குடியரசுத்தலைவர் நீக்கலாம். அவை வருமாறு:

அ. நொடித்துப்போதல் அல்லது கடனில் மோசடி

ஆ. தனது அலுவலகப் பணிகளுக்கு வெளியே ஊதியம் பெறும் ஊழியராகப் பணியாற்றும் போது

இ. உடல் நலம் குறைவு காரணமாக ஒருவரால் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை என குடியரசுத்தலைவர் கருதும்போது.

இவைதவிர முறைகேடு குற்றத்தின் கீழும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அல்லது உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நீக்க முடியும். இருந்தபோதும் இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் கருத்துரை கேட்டும் குடியரசுத்தலைவர் செயல்படலாம். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் நீக்கத்துக்கான காரணத்தை உறுதி செய்தால் அதனடிப்படையிலும் குடிரசுத்தலைவர் நீக்கம் செய்வார். அரசமைப்பு வழங்கியுள்ள உறுப்புகளின் படி உச்ச நீதிமன்றம் இந்த விவகாரத்தில் வழங்கும் ஆலோசனை குடியரசுத்தலைவரின் முடிவைக் கட்டுப்படுத்தும். இருந்தபோதும், உச்ச நீதிமன்ற விசாரணை நடைபெறும் காலத்தில் மாநில ஆளுநர் குடிரசுத்தலைவரின் நீக்கத்தை நிறுத்தி வைத்து பணி இடை நீக்கம் மட்டும் செய்யலாம்.

மேலும், இப்பொறுத்தப்பாட்டில் அரசமைப்பு 'தவறான நடத்தை' எனும் சொல்லாடலைப் பயன்படுத்துகிறது. ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது ஏதேனும் உறுப்பினர்கள் தவறான நடத்தையில் ஈடுபடும் குற்றத்தில் ஈடுபடுவார்களானால் என கூறுகிறது. அவர் அ) மத்திய அல்லது மாநில அரசின் ஏதேனும் குறிப்பிட்ட ஒப்பந்தம், உடன்படிக்கையில் ஆர்வம் காட்டுபவரானால், ஆ) இத்தகைய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் பங்கேற்பதன் மூலம் உறுப்பினர் வருவாய் அல்லாமல் கூடுதல் வருவாய் அல்லது இதர உறுப்பினர்களுடன் இணைந்து ஆதாயம் கிடைக்கும் என்று கூறுகிறது.

### சுதந்திரத் தன்மை

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களும் சுதந்திரமாகச் செயல்படுவதை உறுதி செய்யவும் பாகுபாடான செயல்பாடுகளில் இருந்து பாதுகாக்கவும் அரசமைப்பு உறுப்புகளில்வழிவகைகள்செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

அ.) அரசமைப்பில் கூறப்பட்டுள்ள முறைகளில் அல்லது வழிகளில் நடந்துகொண்டால் மட்டுமே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அல்லது உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நீக்க

முடியும். இதனால் அவர்கள் பதவிக்காலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆ.) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பணி நிலைகள் ஆளுநரால் முடிவு செய்யப்படுகின்றன எனினும் பதவி நியமனத்துக்குப் பின்னர் அவரது சாதகமற்ற நிலைமைக்கு ஏற்ப மாறுதல் செய்ய இயலாது.

இ.) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஊதியம், சலுகைகள், ஓய்வூதியம் என அனைத்தும் அரசின் தொகுப்பு நிதியில் இருந்து வழங்கப்பட வேண்டும். இதனால் சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட வேண்டியதில்லை.

ஈ.) ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் (நீக்கப்படும்போது) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அல்லது ஏதேனும் ஒரு மாநிலத்தின் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது உறுப்பினராக நியமனம் பெரும் தகுதியுடையவராகிறார். ஆனால், அரசின் வேறு பதவிகளுக்கு நியமிக்கப்பட முடியாது.

உ.) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வாணையத்தில் ஒரு முறை பதவி வகித்தபின்னர் மீண்டும் அதே பதவியில் மறு நியமனம்செய்யப்பட முடியாது. அதாவது இரண்டாவது முறை அப்பதவியில் நியமிக்கப்பட முடியாது.

**பணிகள்**

மத்திய அரசுப் பணியிடங்கள் தொடர்பில் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேற்கொள்ளும் பணிகள் போன்றே மாநில அரசுப் பணியிடங்கள் தொடர்பில் அனைத்து பணிகளையும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழங்குகிறது. அவை பின்வருமாறு:

அ. மாநில அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகள் நடத்துவது

ஆ. பணியாளர் மேலாண்மை தொடர்பாக கீழ்க்காணும் ஆலோசனைகள் வழங்குகிறது

1. குடிமைப் பதவிகள், குடிமைப் பணிகள் தொடர்பான அனைத்து பணிகளுக்கான நியமன முறைகள்.

2. குடிமைப் பணிகள் மற்றும் பதவிகளுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகள், இதர துறைகளுக்கு பணியிட மாறுதல்கள் போன்றவற்றில் கோட்பாடுகள் கடுமையாகப் பின்பற்றப்படுதல்

3. குடிமைப் பணிகள் / பதவிகளுக்குப் பொறுத்தமான நபர்கள் நியமனம். மாறுதலிலும் இதே நிலை. அயல்நாட்டுப் பணிகள் மாறுதல்களிலும் பொறுத்தமான நபர்கள். பதவி உயர்வுக்கான பரிந்துரைகளை தொடர்புடைய துறைகள் தேர்வாணையத்துக்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டும்.

இ.) ஒரு மாநில அரசில் பணியாற்றும் பணியாளர்களின் பணியினைப் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள்

- எச்சரிக்கை விடுத்தல்
- ஊதிய உயர்வு பிடித்தம்
- பதவி உயர்வு நிறுத்தம்
- இழப்பை ஈடு செய்தல்
- கீழ்நிலைப் பணிக்கு இறக்குதல்
- கட்டாய ஓய்வு
- பணியில் இருந்து விலக்குதல்
- பணியில் இருந்து நீக்குதல்

ஈ.) ஒரு குடிமை ஊழியர் தமது கடமைகளில் இருந்து தவறியதற்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள அந்த ஊழியர் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கான செலவுகள்

உ.) பணியின் போது ஏற்படும் காயங்கள் காரணமாக ஓய்வூதியம் வழங்கக் கோரும் எவ்விதமான கோரிக்கைகள்; அல்லது தொடர்பில் கோரப்படும் ஏதேனும் தொகை.

ஊ.) பணியாளர் மேலாண்மை தொடர்பான இதர அனைத்து விவகாரங்கள்

இந்த விவகாரங்களில் ஒரு மாநில அரசு தமது மாநில பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கவில்லை எனில் பாதிக்கப்பட்ட அரசு பணியாளருக்கு நீதிமன்றமும் தீர்வு வழங்க இயலாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதாவது, தேர்வாணையத்துடன் கலந்தாலோசிப்பது அல்லது தேர்வாணைய ஆலோசனை இல்லாமல் செயல்படுவது ஆகிய தருணங்களில் மாநில அரசின் நடவடிக்கைகளை நீதிமன்றங்களால் ரத்து செய்ய இயலாது என்பது இதன் பொருளாகும். இதனால், மேற்கூறியவை வழிகாட்டுதல்களாகக் கொள்ளப்பட வேண்டுமேயொழிய சட்டப்பூர்வக் கடமையாகக் கொள்ளப்படக் கூடாது. அதாவது மேலே குறிப்பிட்ட விவகாரங்களில் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசிக்க வேண்டும் என்பது வழிகாட்டு நெறிகள்தாம்; சட்டப்பூர்வ கடமைகள் அல்ல. இதேபோல, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்வு செய்துள்ளது என்பதாலேயே அந்த நபருக்கு பணி வழங்குவது உரிமை என்று கோர முடியாது என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருந்தபோதும் அரசு நியாயமாகவும் பாகுபாடற்றும் நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுப் பணிகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு ஒதுக்கப்படும் கூடுதல் பொறுப்புகளை மாநிலச் சட்டமன்றங்கள் முடிவு செய்கின்றன. மாநிலச் சட்டமன்றங்கள் மூலம் உள்ளாட்சி பணியாளர் நியமனம், பெருநிறுவன அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்வது தொடர்பான கூடுதல் பொறுப்புகளையும் ஒரு மாநில அரசு தமது தேர்வாணையத்துக்கு அளிக்க முடியும். மாநிலச் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றுவதன் மூலம் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகார வரம்புகள் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

தமது செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையை ஆண்டுதோறும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் மாநில ஆளுநரிடம் அளிக்கிறது. இந்த அறிக்கையைப் பரிசீலித்து தேர்வாணையத்தின் ஆலோசனைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதற்கான காரண–காரிய விளக்கங்களுடன் கூடிய தமது விளக்கத்துடன் மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் ஆளுநர் முன் வைப்பார்.

### வரம்புகள்

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நிர்வாக வரம்புக்கு வெளியிலும் சில விவகாரங்கள் நிறுத்தப்படுகின்றன. அதாவது இவ் விவகாரங்களில் மாநில அரசு தமது தேர்வாணையத்தின் ஆலோசனைகளைப் பெற வேண்டியதில்லை. அவை வருமாறு

அ.) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பதவிகள் நியமனங்கள் இட ஒதுக்கீடு செய்யப்படும்போது

ஆ.) பதவிகள், நியமனங்கள் ஒதுக்கீட்டில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் கோரிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது.

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்புக்குள் வராத பதவிகள், பணியிடங்கள், இதர விவகாரங்களை ஆளுநர் நீக்குகிறார். மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கத் தேவையில்லை எனக் கருதும் அரசு பணியிடங்கள், பதவிகள் தொடர்பாக ஆளுநரே ஒழுங்குமுறைகளை உருவாக்கிக்கொள்ள அரசமைப்பு அனுமதிக்கிறது. ஆனால், குறைந்தது 14 நாட்களுக்கு முன் மாநிலச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அவையின் ஒப்புதல் பெற்றே அறிவிக்கப்பட வேண்டும். இதில் சட்டமன்றம் எந்த திருத்தமும் மேற்கொள்ளலாம்; அல்லது நிராகரிக்கலாம். அதாவது, இறுதி முடிவை சட்டமன்றமே மேற்கொள்ளும்.

### பங்களிப்பு

ஒரு மாநில அரசுப் பணியிடங்கள் தகுதி அடிப்படையில் நிரப்பப்படுவதைக்

கண்காணிக்கும் அமைப்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைய வேண்டும் என அரசமைப்பு கருதியது. அரசு பணியிடங்களுக்கான நியமனம், மற்றும் பதவி உயர்வு, ஒழுங்குநடவடிக்கை விவகாரங்களில் ஆலோசனை கோரும்போது ஆலோசனை வழங்குவது ஆகியன தேர்வாணையத்தின் பணிகளாகக் கருதப்பட்டன. பணியிடங்களை வகைமைப்படுத்துதல், ஊதிய விகிதம், பணி நிலைகளை வகுத்தல், பதவி நிலை மேலாண்மை பயிற்சி போன்றவை தேர்வாணையத்தின் பொறுப்பல்ல. இந்த விவகாரங்களை மாநில அரசின் பொது நிர்வாகத் துறை அல்லது பணியாளர் (தனி) துறை மேலாண்மை செய்கிறது. எனவே, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் என்பது மையப்படுத்தப்பட்ட நியமன முகமை மட்டுமே. மாநிலத்தின் பணியாளர்கள் மேலாண்மை என்பது மாநில அரசின் பணியாளர் (தனி) துறை அல்லது பொது நிர்வாகத் துறையின் பணிகள் ஆகும்.

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையப் பணிகள் வரம்புக்கு உட்பட்டவை மட்டுமல்லாமல் அவை அளிக்கும் ஆலோசனைகளும் அரசைக் கட்டுப்படுத்தாது. ஆணைய ஆலோசனைகளை ஏற்பதும் நிராகரிப்பதும் திருத்துவதும் அரசின் முடிவு ஆகும். ஆனால், இவ்வாறு நிராகரிப்பது அல்லது திருத்துவதும் ஏன் என்பதற்கு அரசு சட்டமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டும் என்பது ஆணைய ஆலோசனைகளுக்கு உள்ள ஓர் பாதுகாப்பு அம்சம் ஆகும். மேலும் ஒரு சட்டம் இயற்றுவதன் மூலமும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனை செயல்பாடுகளுக்கான விதிகளை உருவாக்க முடியும்.

1964இல் மாநில கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட்ட பின்னர் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பங்களிப்பு பாதிப்புக்குள்ளானது. ஏனெனில் ஒரு குடிமைப் பணியாளருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதில் இரண்டு அமைப்புகளும் ஆலோசிக்கப்படுகின்றன. அப்போது இரண்டு அமைப்புகளும் முரண்பாடான முடிவை மேற்கொள்ளும்போது பிரச்சனை எழுகிறது. இருந்தபோதும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைம் ஒரு சுயாட்சியான அமைப்பு என்பதால் அதன் முடிவுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இறுதியாக, நீதித்துறையில், மாவட்ட நீதிபதிகள் அல்லாத பிற நீதித்துறை பணியிடங்களுக்கான நியமன விதிமுறைகளை வகுக்க மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆலோசிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் மாநில உயர் நீதிமன்றமும் ஆலோசிக்கப்பட்டது.

### 6.3.5 பணியாளர் தேர்வு ஆணையம்






12th_Political Science_Tamil_Unit_6.indd 162 04-06-2019 11:34:29

**பணியாளர் தேர்வாணையத்தின் பணிகள்**

1. அ) மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான பதவிகளில் அதிகபட்சம் ₹ 10,500 அல்லது அதற்குக்கீழுள்ள குரூப் 'பி' பிரிவு பணியிடங்களுக்கான நியமனங்கள், ஆ.) மேற்கூறிய பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான பதவிகளில் பணியாளர் தேர்வாணைய (ஸ்டாப் செலக்சன் கமிஷன்) வரம்பிலிருந்து விலக்கப்பட்ட பதவிகள் நீங்கலாக தொழில்நுட்பம் சாராத குரூப் 'சி' பிரிவு பணியிடங்களுக்கான நியமனங்கள் மேற்கொள்ளுதல்.

2. தனது வரம்புக்குட்பட்ட பதவிகள்/ பணியிடங்கள் நியமனங்களுக்கான தேர்வுகள், நேர்காணல்கள் மேற்கொள்ளல் வேண்டும். இத்தேர்வுகள் கூடுமானவரை நாட்டில் பல இடங்களில் நடத்தப்பட வேண்டும். அதேபோல, நியமனங்களும் தொடர்புடைய தேர்ச்சிபெற்ற நபர்களின் சொந்த மாநிலம்/ பகுதிகளுக்கு அருகமைந்த பணியிடங்களில் அமர்த்தப்படுதல் வேண்டும்.

3. குறிப்பாக, கீழ்க்காணும் பணியிடங்களுக்கான நியமனம் திறந்த நிலை போட்டித் தேர்வுகள் மூலம் நியமிக்கப்பட வேண்டும்.

i. கீழ்நிலை பிரிவு எழுத்தர் (எல். டி. சி. லோயர் டிவிசன் கிளார்க்) பணியிடங்கள் – மத்திய அமைச்சரவைச் செயலக எழுத்தர் / இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலக பணியிடங்கள், ஆயுதப்படைகள் தலைமையகங்களின் எழுத்தர் பணியிடங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான எழுத்தர் பணியிடங்கள்.

ii. கிரேட் சி மற்றும் டி சுருக்கெழுத்தர் பணியிடங்கள் - மத்திய அமைச்சரவைச் செயலகம் / இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலகம், ஆயுதப்படைகள் தலைமையகங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள்,

துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான சுருக்கெழுத்தர் பணியிடங்கள். மேலும், முன்னர் குறிப்பிட்ட அலுவலகங்கள், துறைகள் அல்லாத பிற துறைகளிலும் மேற்குறிப்பிட்ட பணியிடங்கள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கியது இப் பட்டியல்.

iii. உதவியாளர்கள் - - மத்திய அமைச்சரவைச் செயலகம் / இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலகம், ஆயுதப்படைகள் தலைமையகங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான உதவியாளர் பணியிடங்கள்.

iv. ஆய்வாளர்கள் –நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மத்திய கலால் வரி (எக்ஸைஸ்) துறை மாவட்ட அலுவலகங்கள், வருவான வரித்துறை மாவட்ட அலுவலகங்களின் ஆய்வாளர் பணியிடங்கள் மற்றும் பல்வேறு கலால் துறை அலுவலகங்களின் தடுப்பு அலுவலர்கள், சோதனையாளர்கள் (பிரிவெண்டிங் அலுவலர்கள் மற்றும் எக்ஸாமினர்கள்), அமலாக்கத் (என்போர்ஸ்மெண்ட்) துறையின் உதவி அமலாக்க அலுவலர்கள்

v. துணை ஆய்வாளர்கள் – மத்திய புலனாய்வுத் துறை மற்றும் மத்தியக் காவல்துறை அமைப்புகள்



12th_Political Science_Tamil_Unit_6.indd 163 04-06-2019 11:34:29

vi. பிரிவு கணக்காளர்கள், தணிக்கையாளர்கள், கணக்காளர்கள் – இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம், மற்றும் பிற கணக்காளர் துறைகள் ஆகியவற்றின் பிரிவு கணக்காளர்கள், தணிக்கையாளர்கள், கணக்காளர்கள், மத்திய அரசின் கீழ்நிலை அலுவலகங்கள், கிளைகளின் உயர் பிரிவு எழுத்தர் (அப்பர் டிவிசன் கிளார்க்) பணியிடங்கள்.

vii. துணை நிலை பொறியாளர் (சிவில், மின்னியல்) – பொதுப்பணித்துறை பணியிடங்கள், குரூப் 'சி' பிரிவு (தொழில்நுட்பம்). நான் கெஜட்டட், அமைச்சுத் துறை சாராத, பொது மத்திய பணிகள் சார்ந்த பணியிடம்

viii. புள்ளியியல் ஆய்வாளர் (ஸ்டேட்டிஸ்டிக்கல் இன்வெஸ்டிகேட்டர்) – புள்ளியியல் மற்றும் நிரல் (புரோக்கிராம்) அமலாக்கத் துறையின் குரூப் –'4' துணை நிலை புள்ளியியல் பணியிடங்கள் (எஸ்.எஸ்.சி) பணியிடம்

ix. வரி உதவியாளர் – நேரடி வரிகள் வாரியம் மற்றும் கலால், சுங்க வாரியத்தின் கீழுள்ள பல்வெறு ஆணையகங்களின் பணியிடங்கள். நான் கெஜட்டட், அமைச்சுத் துறை சார்ந்த பணியிடம்

x. பிரிவு அலுவலர் (வணிக தணிக்கை) – இந்தியத் தணிக்கை மற்றும் தணிக்கைத் துறை நான் – கெஜட்டட் குரூப் 'பி' பணியிடம்

xi. பிரிவு அலுவலர் (தணிக்கை) – தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் துறை நான் – கெஜட்டட் குரூப்' பி 'பணியிடம்

4. பதவி உயர்வுக்கான துறை சார் தேர்வுகளையும் ஆணையம் மேற்கொள்கிறது

(i) மத்திய அமைச்சரவை செயலக குரூப் டி பிரிவு பணிகள் மற்றும் இந்திய வெளியுறவு பணிகள், ரயில்வே வாரிய செயலக எழுத்தர் பணிகள் / ஆயுதப்படைகள் எழுத்தர் பணிகளிருந்து எல்.டி.சி ஆக பதவி உயர்வு பெற இத்தேர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) குரூப் 'சி' சுருக்கெழுத்தர்கள் - மத்திய அமைச்சரவைச் செயலக குரூப் 'டி' பிரிவு சுருக்கெழுத்தர்கள் பணிகள் மற்றும் இந்திய வெளியுறவு பணிகள், ரயில்வே வாரிய செயலக எழுத்தர் பணிகள் / ஆயுதப்படைகள் சுருக்கெழுத்தர்கள் பணிகளில் இருந்து குரூப் 'டி' பிரிவு சுருக்கெழுத்தர்கள் ஆக பதவி உயர்வு பெற இத்தேர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5. ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளுக்கான தட்டச்சுத் தேர்வுகள் கால இடைவெளியில் நடத்தப்படுகின்றன.

6. ₹9,300 முதல் 34,800 வரை ஊதிய அலகு கொண்ட ₹42,000வரை கிரேட் ஊதியம் பெறும் அனைத்து குரூப் 'பி' பணியிடங்களுக்கும் பல்வேறு மத்திய அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த கிளை அலுவலகங்களுக்கான குரூப் 'சி' பிரிவு தொழில்நுட்பம் சாராத பணியிடங்கள் நியமனங்களுக்கான திட்டங்களையும் உருவாக்குகிறது.

7. ₹10, 500 அதிகபட்ச ஊதிய அலகு கொண்ட குரூப் 'பி' பணியிடங்களுக்கும் அமைச்சகங்கள் / துறைகள் வாரியான தொழில்நுட்பம் சாராத குரூப் 'சி' பணியிடங்களுக்கும் அவ்வப்போது தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

8. அவ்வப்போது மத்திய அரசால் பணிக்கப்படும் இதர பணிகளையும் ஆணையம் மேற்கொள்கிறது.



12th_Political Science_Tamil_Unit_6.indd 164 04-06-2019 11:34:29

## 6.4 தேர்தல் ஆணையம்




நாட்டில் நியாயமான, நேர்மையான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்திட அரசமைப்பால் நேரடியாக உருவாக்கப்பட்ட நிரந்தரமான, சுயாட்சியான அமைப்பு தேர்தல் ஆணையம். அரசமைப்பு உறுப்பு 324, நாடாளுமன்ற இரு அவைகள், மாநிலச் சட்டமன்றங்கள், குடியரசுத்தலைவர், துணைக் குடியரசுத்தலைவர் தேர்தல்களைக் கண்காணித்தல், வழிகாட்டுதல், கட்டுப்படுத்துதல் ஆகிய அதிகாரங்களை தேர்தல் ஆணையத்துக்கு முழுமையாக வழங்குகிறது. இவ்வாறு, இந்திய தேர்தல் ஆணையம் மத்திய – மாநில அரசுகள் இரண்டுக்குமான பொது அமைப்பாக இயங்குகிறது.

மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளான பஞ்சாயத்துகள், நகராட்சிகளுக்கான தேர்தல்களை இந்திய தேர்தல் ஆணையம் நடத்துவதில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இதையொட்டி மாநிலத் தேர்தல் ஆணையங்கள் அமைத்துக்கொள்ள அரசமைப்பு வழி வகுத்துள்ளது.

## 6.5 இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம்

இந்திய அரசமைப்பு உறுப்பு 148, ஒரு சுயாட்சி அதிகாரம் கொண்ட இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம் (சி.ஏ.ஜி) அமைக்க வழிவகை வழங்கியுள்ளது. தலைமைக் கணக்குத் தணிக்கையாளரே இந்திய கணக்குக் மற்றும் தணிக்கைத் துறையின் தலைவர் ஆவார். அவரே அரசுக் கருவூலத்தின் பாதுகாவலர் எனலாம். மத்திய, மாநில அரசுகள் அனைத்தின் கீழ் இயங்கும் மொத்த நிதி அமைப்பினையும் கட்டுப்படுத்துகிறார்.



நிதி நிர்வாகம் தொடர்பில் இந்திய அரசமைப்பு வகுத்தளித்துள்ள விதிகள், இதனை அமலாக்கம் செய்ய நாடாளுமன்றம் இயற்றியுள்ள சட்டங்கள் ஆகியனவற்றின் படி கண்காணிப்பது இவர் கடமையாகும். இதனால் தான் அரசமைப்புப்படி "முக முக்கியத்துவம் கொண்ட அலுவலர் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்" என டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் கூறினார். இந்திய அரசின் மக்களாட்சி அமைப்பின் அரண்களில் அவர் ஒருவர். இதர அரண்கள்: உச்ச நீதிமன்றம். தேர்தல் ஆணையம், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகும்.

## 6.6 நிதி நிர்வாகம்

### நிதி நிர்வாகத்தின் நோக்கங்கள்:

வளர்ந்த நாடுகளின் கட்டுப்படுத்த இயலாத சந்தை வளர்ச்சி நிதி நிர்வாகத்துக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தியுள்ளது. இச்சந்தைகள் நிதி பற்றாக்குறைகள், பெரும் கடன்சுமை, மூலதன நிதி பற்றாக்குறை இவையே இதன் பண்புகளாகும். அதேநேரம், நிலைத்த பொருளாதாரம், வளர்ச்சி, சுய – சார்பு, வருவாய் – செல்வப் பகிர்வு வீதத்தில் சமநிலை அனைத்துப் பகுதிகளில் வளர்ச்சி போன்றவற்றை இலக்காக கொண்டு நிதி கொள்கைகள், நிர்வாகம் ஆகிய துறைகளில் ஊக்கங்களை ஏற்படுத்தும் முனைப்பில்



12th_Political Science_Tamil_Unit_6.indd 165 04-06-2019 11:34:30

வளரும் நாடுகள் உள்ளன. அரசு விவகாரங்கள் மேலாண்மையில் அரசியல் கொள்கைகள், பொருளாதார வல்லமை முக்கியம் என்ற போதிலும் நிதி நிர்வாகமும் முக்கியத்துவம் வாய்ந்த பங்கினைக் கொண்டுள்ளது.

அவை பின்வருமாறு:

1. பொதுத்துறை நிறுவனங்கள் நிதி மேலாண்மை
2. திட்டங்கள், நிரல்கள் அமலாக்கம்
3. பொது நலன் மற்றும் சமூக பணிகளுக்கான வழிகள்
4. வளர்ச்சி, வேலை வாய்ப்பு, விலைவாசி கட்டுப்பாடு
5. மூலதன உருவாக்கம்
6. தேசிய நிதியை படைப்பாக்கத்துடன் முதலீடு செய்தல்
7. நாடாளுமன்ற செயல்முறைகளை சீராக்குதல்
8. சமத்துவமும் சம பங்கும்

### நிதி நிர்வாகக் கோட்பாடுகள்:

நிதி நிர்வாகத்தில் முக்கியக் கோட்பாடுகளாகக் கீழ்க்கண்டவற்றைப் பட்டியலிடலாம்.

1. பொது நலன், மக்கள் தேர்வு, மக்கள் கொள்கை ஆகியனவற்றை முதன்மையாகக் கொண்ட கொள்கை
2. அரசியல் வழிகாட்டுதல் மற்றும் கட்டுபாட்டுக் கோட்பாடு
3. தொடர்புக் கோட்பாடு
4. நிறுவனத்தினையும் மேலாண்மையையும் ஒருங்கிணைக்கும் கோட்பாடு
5. நீடித்த தன்மை, சமநிலை கோட்பாடு
6. எளிமை, நெகிழ்வுத்தன்மை கோட்பாடு
7. நடத்தை, ஒழுக்கம், சீர்மை கோட்பாடு
8. மக்கள் நம்பிக்கை, கடமைப்பாடு கோட்பாடு

### இந்திய நிதி நிர்வாக வரலாற்றின் நான்கு முக்கியக் கால கட்டங்கள்:

**காலகட்டம் 1 (1765 – 1858) –** அமைப்பு உருவாக்கம் மற்றும் ஸ்திரப்படுத்துதல்

**காலகட்டம் 2 (1860– 1919) –** முறைமைகள், செயல்பாடுகள் மேம்பாடு

**காலகட்டம் 3 (1919 – 1947)** – மக்களாட்சிப் படுத்துதல், அதிகாரப்பரவலாக்கல்

**காலகட்டம் 4 (1950 முதல் இன்றுவரை)** – மக்கள்மயப்படுத்துதல்

### புதிய வளரும் போக்குகள் – இந்திய நிதி நிர்வாகம்:

1. நிதிப்பற்றாக்குறையை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல்.
2. வளர்ச்சிசாரா செலவினங்களைக் குறைத்தல்.
3. பற்றாக்குறை இல்லா (ஜீரோ பேஸ்) நிதிநிலை கண்ணோட்டம் உருவாதல்.
4. பொதுத் துறை மீதான அழுத்தம் குறைத்தல்.
5. மக்கள் நலன்கள், பணிகளில் அதிகாரவர்க்க மனோநிலை நீக்கம்.
6. நிதி மேலாண்மை திட்டங்களில் மைய நீக்க பொறுப்புணர்வில் கவனப்படுத்துதல்.
7. தாராளமயம், கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

## 6.6.1 நிதிநிலை அறிக்கை தாக்கலும் அமலாக்கமும்

### நிதிநிலை அறிக்கை சுற்று:

ஒரு நிதிநிலை அறிக்கையின் செயலாக்கம் அதற்கான சட்டம் இயற்றும் நடைமுறைகளைக் கணக்கில் கொண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் ஒரு காலச்சுற்று முறையைக் கணக்கில் கொள்கிறது. நிதிநிலை அறிக்கை நாடாளுமன்ற ஒப்புதல் பெறுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

### காலச்சுற்று கீழ்க்காணும் கட்டங்களைக் கொண்டுள்ளது:

- தயாரிப்பு மற்றும் தாக்கல்
- ஒப்புதல்
- நிர்வாகம், தணிக்கை

ஒரு குறிப்பிட்ட காலத்தில் பல சுற்றுகள் நடைபெறலாம். மீறப்படலாம். பல சுற்றுப்பிரிவுகள் வெவ்வேறு காலகட்டங்களைக் கொண்டுள்ளன.

### நிதிநிலை அறிக்கை தாக்கல்:

நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் செயல்முறைகள், நிதிநிலை அறிக்கை தாக்கல் காலத்திலிருந்து ஆறு மாதங்கள் முன்பாக, பொதுவாக செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில், நிதி அமைச்சகத்திடமிருந்து சுற்றறிக்கை பெறப்பட்டதும் தொடங்குகிறது. அந்த சுற்றறிக்கை நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் திட்டம் சார் அம்சங்கள், திட்டம் சாரா அம்சங்கள், வழிகாட்டுதல்கள் என ஒவ்வொன்று குறித்தும் இறுதி மதிப்பீடுகள் சமர்பிக்க தொடர்புடைய துறைகளுக்கு ஒரு கால அளவை நிர்ணயம் செய்து அறிவிக்கும். பொதுவான விதி என்னவென்றால் யார் நிதியை செலவளிக்கப்போகிறார்களோ அவர்களே நிதிநிலை மதிப்பீடுகளையும் உருவாக்க வேண்டும் என்பது ஆகும். நிதி அறிக்கை முன்மொழிவுகள் கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டிருக்கும்.

1. கணக்குகள் வகைமைப்படுத்துதல்
2. நடப்பு ஆண்டின் நிதிநிலை மதிப்பீடுகள்
3. நடப்பு ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகள்
4. கடந்த ஆண்டின் அசல் செலவினங்கள்
5 அடுத்த நிதி ஆண்டுக்கான முன்மொழிவுகள் மதிப்பீடுகள்

### நிதி ஆண்டு

1860 இல் முதல் நவீன நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது நிதி ஆண்டு என்பது மே 1 முதல் ஏப்ரல் 30 வரை என்பதாக இருந்தது. இது 1866-இல் இங்கிலாந்து அரசின் நடைமுறையை ஒட்டி ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை என மாற்றிக்கொள்ளப்பட்டது.

**செயல்முறை**

தமிழ்நாட்டின் சமூக வளர்ச்சி மற்றும் குறியீடுகளை மதிப்பீடு செய்யவும்.

### அமர்த்தியா சென் – ஜெகதீஷ் பகவதி இரு மேதைகளின் விவாதம்



அமர்த்தியா சென் ஜெகதீஷ் பகவதி

பொருளாதார கொள்கை குறித்த விவாதங்கள் இன்று நடப்பதுபோல் என்றும் நடந்ததில்லை. உலக பொருளியல் கல்விப் புலத்தில் இரு பெரும் வல்லுனர்கள் எனக் கருதப்படும் அமர்த்தியா சென் – ஜெகதீஷ் பகவதி இருவரும் இந்திய ஆளும் அமைப்பு எதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என கடும் விவாதங்களில் ஈடுபட்டனர். ஹார்வர்டு பல்கலைக்கழக பொருளாதார, தத்துவ துறை பேராசிரியர் சென் பொருளாதாரத்துக்கான நோபல் விருது பெற்றவர். கொலம்பியா பல்கலைக்கழக பொருளாதார பேராசிரியர் பகவதி உயர் விருதுகளுக்காகப் பல முறை பரிந்துரைக்கப்பட்டவர். இருவருடன் அவினேஷ் தீட்சித் என மூவரும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களாகக் கருதப்படுகிறார்கள்.

**சென்** – பகவதி விவாதங்கள் இந்திய அரசியல் தலைவர்கள் மத்தியில் பெரும் கேள்விகளை எழுப்பின.


மக்களின் உற்பத்தித் திறனும் வளர்ச்சியும் அதிகரிக்க வேண்டுமானால் இந்தியா தனது சமூக கட்டமைப்பில் அதிக முதலீடு செய்யவேண்டும் என சென் வலியுறுத்தினார். பொருளாதார வளர்ச்சி அதிகரித்தால் மட்டுமே போதும்; அதன்மூலம் சமூகத் திட்டங்கள் தொடங்கத் தேவையான மூலதனம் கிடைத்துவிடும் என பகவதி வாதிட்டார். மனித செயலாற்றலை அதிகரிக்க சுகாதாரம் மற்றும் கல்வியில் அதிக முதலீடு



12th_Political Science_Tamil_Unit_6.indd 167 04-06-2019 11:34:30

தேவை என்பது சென் சிந்தனையின் மையமாக இருக்கிறது. இத்தகைய முதலீடுகள் இல்லாமல் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முடியாது என சென் நம்புகிறார். ஆனால் வளர்ச்சியால் தொடக்கத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கலாம்; ஆனால், தொடர் வளர்ச்சி மூலம் அரசுக்கு தேவையான வளங்கள் பெருகும். மறு பகிர்வு மூலம் தொடக்க ஏற்றத்தாழ்வினைக் கட்டுப்படுத்த முடியும் என பகவதி கூறுகிறார்.

### 6.6.2 இந்தியாவின் வரிவகைகள்




**ஜி.எஸ்.டி அளவு:**

**ஜி.எஸ்.டி வரி அளவு 5%** – ஸ்கீம்மர், பால் பவுடர், மீன் உரங்கள், தேயிலை உள்ளிட்டவை.

**ஜி.எஸ்.டி வரி அளவு 12%** – வெண்ணெய், பாலாடைக்கட்டி, ஊறுகாய், பழச்சாறுகள், பற்பசை, மருத்துவம்.

**ஜி.எஸ்.டி வரி அளவு 18%** – பனிக்கூழ், கைப்பெட்டி, குடிநீர், கைகடிகாரம், கதவு.

**ஜி.எஸ்.டி வரி அளவு 28%** – பான் மசாலா, சலவை இயந்திரம், வெற்றிட சுத்தப்படுத்திகள், இயந்திர வாகனங்கள், இயந்திர மிதிவண்டி.


**ஜி.எஸ்.டி–க்குள் வராத பொருள்கள்**

சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல், வான் எரிபொருள், இயற்கை எரிவாயு, மது ஆகியவை.



12th_Political Science_Tamil_Unit_6.indd 168 04-06-2019 11:34:30

**பொருள்கள் விநியோகம் அல்லது சேவைகள் வழங்குதல்**
**(பொருள்கள் மற்றும் சேவை வரி – G.S.T)**




## அருஞ்சொற்பொருள்

❖ **குடிமைப்பணி:** சட்டமன்றம், நீதித்துறை, இராணுவம் இம்மூன்றும் அல்லாத அரசு பணிகள் குடிமைப் பணிகள் ஆகும். இப்பணிகளுக்கான நியமனங்கள் பொதுவாக போட்டி தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. வேலைகளும் மற்றும் பணி செய்வோரையும் அரசாங்கத்தின் மூலம் பணி அமர்த்தப்பட அனைத்து பணியாளர்கள் அரசின் குடிமைக் கிளைகள் மூலம் பணியமர்த்தப்படுகின்றன.

❖ **பணி நியமனம்:** இது தேர்ந்தெடுக்கபடாத அரசுப் பணி ஆகும். பல்வேறு விதமான நிர்வாகம் பதிவுகளின் கீழ் பல்வேறு விதமான நியமனங்கள் நடைபெறுகின்றன. போட்டியில்லா நியமனங்கள் அரசாங்கத்தின் மூலம் பெறப்படுகிறது. இது குடிமைப் பணி பதிவேடுகளில் இடம் பெறாது.

❖ **குடிமைப் பணி மறுசீரமைப்பு:** குடிமைப் பணி திறனை மேம்படுத்தவும், ஆள்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு, சம்பளம், பணியாளர்களின் எண்ணிக்கை, பணியாளரின் செயல்திறன் மதிப்பீடு போன்றவற்றில் உள்ள சிக்கல்களை களைந்து சீர் செய்வது. இதன் உண்மையாள பயன்பாடு பொருளாதாரத்திலிருந்தும், அரசியல் பொருளாதாரத்திலிருந்தும் பெறுகின்றது.

❖ **நேர்மைத் தன்மை:** பொது நிர்வாகத்தில் நேர்மைத் தன்மை என்பது ஒருவர் தன்

கடமையை நிறைவேற்றுவதில் இருக்கும் நம்பகத்தன்மையை குறிக்கும். ஊழலுக்கும், அதிகார பாகுபாடுகளுக்கும் எதிரான கருத்தியல் போக்கைக் கொண்டது. இது பொறுப்புணர்வும், வெளிப்படை தன்மையையும் உள்ளடக்கியது ஆகும். மேலும் நேர்மைத் தன்மை என்பது தவறிழைக்க இயலாத, ஒரு சிதைவுறா நிலையாகும். நம்பிக்கை, நாணயத்தின் மறு பெயர்தான் நேர்மைத் தன்மை ஆகும்.

- **பொது நிர்வாகம்:** பொது நிர்வாகத்தின் உட்கருத்தானது அரசாங்க கொள்கைகளையும் திட்டங்களையும் அமைப்பது மேலும் அரசாங்க அதிகாரிகளின் நடத்தை மூலம் தங்கள் கடமைகளுக்குப் பொறுப்பேற்கச் செய்வது.

- **வெளிப்படைத் தன்மை:** மக்களுக்கு தேவையான தகவல்களை தடையில்லாமலும், சரியான நேரத்தில் உண்மையான தகவல்களையும், பொதுத்துறை நிறுவனங்களின் செயல் தகவல்களையும், பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறனையும், அதில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளையும் ஒளிவு மறைவு இல்லாமல் கொடுப்பதே வெளிப்படைத் தன்மை ஆகும். மேலும் அரசியல் ரீதியான அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளையும், முடிவுகளையும், நடைமுறைகளையும் தெரிவிப்பது ஆகும்.

- **மக்கள் நல அரசு:** அரசியல் அமைப்பு என்பது மக்கள் நலவாழ்வில் அரசு காட்டும் அக்கறையிலிருந்து கட்டமைக்கப்படுகிறது. அவர்களுக்கு குறைந்தபட்ச தரமான வாழ்க்கையை வாழ வழி செய்ய வேண்டும். அதாவது தரமான இலவச கல்வி, சீரான சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகள், ஊனம், நோய், வருமானத்திற்கான ஊக்கத் தொகை, வேலையின்மை ஆகியனவற்றுக்கு எதிரான காப்பீடு, வருவாயை ஈடுகட்டும் குடும்ப சலுகைகள், முதியோர் ஓய்வூதியம் ஆகியனவற்றை இடையூறு இல்லாமல் வழங்க வேண்டும்.

- **அதிகார பரவலாக்கம்:** அதிகாரம், செயல்பாடுகள், வள ஆதாரங்கள் இவையெல்லாம் மத்திய அரசாங்கத்தில் இருந்து உள்ளூர் பஞ்சாயத்து வரை இடமாற்றம் செய்தலே ஆகும். நடைமுறையில் பரவலாக்கம் என்பது ஒருவிதமான சமநிலையை மத்திய அரசாங்கம் மற்றும் பஞ்சாயத்துக்கு இடையே ஏற்படுத்துவதே ஆகும்.

- **மின்–மக்களாட்சி:** மின்-மக்களாட்சி என்பது செயல் முறைகளை பரவலாக்கம் செய்யும் வகையில் இணையம் போன்ற மின்னனு தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது ஆகும். தேர்தல் மற்றும் பங்கேற்பு அமைப்புகள் உள்ளடக்கியது. ஒப்பீடு அளவில், புதிய அரசியல் வளர்ச்சி ஆகும். அரசு, குடிமைக் குழுக்கள், சமுதாயங்கள் இடையே விவாதங்களை உருவாக்க வல்லவை.

- **மின் ஆளுகை:** தகவல்கள், தொலைதொடர்பு மற்றும் தொழில்நுட்பக் கருவிகளை பயன்படுத்தி அரசாங்கம், மக்கள் மற்றும் அலுவல்கள் இவற்றிற்கிடையே எளிமையான உருவாக்க தொடர்புகளை செய்வது ஆகும். அரசு செயல்பாடுகளுக்கு இடையே மக்களாட்சிப்படுத்தப்பட்ட ஆளுகையை எளிமைப்படுத்தி, மேம்படுத்துவது ஆகும்.

- **உலகமயமாக்கல்:** இது உலக நாடுகளுக்கிடையே ஒருங்கிணைப்பையும், ஒன்றோடு ஒன்று சார்ந்து இருப்பதையும் அதிகரிக்கச் செய்கிறது. இது பன்முகத்தன்மை கொண்டது, அதாவது பொருளாதாரம், அரசியல், சமூகம் மற்றும் கலாச்சாரம் ஆகிய பண்புகளை கொண்டது இதற்குமுன் இல்லாத வகையில், சேவைகள், பொருள்கள் பரிமாற்றத்தை ஊக்குவிக்கிறது. தனியார் மூலதனம், கருத்துகளின் சுற்றோட்டம், ஊக்க உணர்வுகள், புதிய சமூக, பொருளாதார அசைவுகளை உருவாக்குகிறது.

❖ **நல்லாட்சி:** நல்லாட்சிக்கு இன்றியமையாததாக இருப்பது சிறந்த வலுவான மேலாண்மை (திறன், செயல்திறன், பொருளாதாரம்) பொறுப்புணர்வு, தகவல் மற்றும் பரிமாற்றம், வெளிப்படைத்தன்மை, வளர்ச்சிக்கான சட்டபூர்வமான கட்டமைப்பு (நீதித்துறை, மனித உரிமைகள், சுதந்திரம்).

## மதிப்பிடுதல்

### I. சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்

1. அனைத்து இந்தியப் பணிகளின் உறுப்பினர்களை யார் நியமனம் செய்வார்?

    அ) குடியரசுத்தலைவர்
    ஆ) மத்திய உள்துறை அமைச்சர்
    இ) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுத் தலைவர்
    ஈ) இந்தியாவின் அட்டார்னி ஜெனரல்

2. மத்தியில் குடிமைப் பணியிடங்கள் நியமனங்களுக்குப் பொறுப்பான ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு என்பது

    அ) குடியரசுத்தலைவரின் அவசர சட்டத்தின் மூலம் 1950-இல் உருவாக்கப்பட்டது
    ஆ) நாடாளுமன்றத்தால் நிறைவேற்று தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட்டது
    இ) அரசமைப்பால் அனுமதிக்கப்பட்டது
    ஈ) இந்திய சுதந்திர சட்டம் 1947-இன் மூலம் உருவாக்கப்பட்டது

3. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் உருவாக்கம்.

    அ) அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது
    ஆ) நாடாளுமன்றத்தால் முடிவு செய்யப்பட்டது
    இ) குடியரசுத்தலைவரால் தீர்மானிக்கப்பட்டது
    ஈ) உள்துறை அமைச்சகத்தால் முடிவு செய்யப்பட்டது

4. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவியின் முக்கிய செயல்பாடு என்ன?

    அ) அனைத்து இந்திய மற்றும் மத்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் மூலம் நியமனம் செய்தல்
    ஆ) கடமையை நிறைவேற்றும் போது ஏற்படும் செலவுகளை ஏற்பதற்கான குடியரசுத் தலைவரிடம் அறிவுறுத்தல்
    இ) குடிமைப் பணியாளர்களுக்கு எதிரான குடியரசுத்தலைவர் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்
    ஈ) இவை அனைத்தும்

5. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் உறுப்பினர்களின் பணிக்காலம் முடியும் முன்னே அவர்களை பணிநீக்கம் செய்வது?

    அ) பிரதமர்
    ஆ) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர்
    இ) உச்ச நீதிமன்ற பரிந்துரையின் படி குடியரசுத்தலைவர்
    ஈ) நாடாளுமன்றத்தின் பரிந்துரையின் படி குடியரசுத்தலைவர்

694XWX

6. கீழ் கண்டதில் எது அனைத்து இந்தியப் பணி அல்ல?

அ) இந்தியக் காவல் பணி
ஆ) இந்திய ஆட்சிப் பணி
இ) இந்திய வெளியுறவுப் பணி
ஈ) இந்திய பொருளாதார பணி

7. கீழ் கண்டதில் எது ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டபூர்வமான பணி அல்ல?

அ) குடிமைப் பணியின் நியமனம், பதவிஉயர்வு, கட்டுபாடு ஆகியன தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்
ஆ) குடிமைப் பணியாளர்களின் நலன்கள், உரிமைகள் பேணுதல்.
இ) குடிமைப் பணியாளர்களின் குறைகளை கேட்டு தீர்த்து வைத்தல்
ஈ) மாநிலத் தேர்வாணையச் செயல்களைக் கண்காணித்தல்.

8. புதிய அனைத்து இந்தியப் பணியை இவ்வாறு உருவாக்கலாம்?

அ) அரசமைப்புத் திருத்தச்சட்டத்தின் மூலம்
ஆ) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசித்து
இ) நாடாளுமன்றத்தின் மூலம்
ஈ) மத்திய அமைச்சரவையின் பரிந்துரை பேரில் குடியரசுத்தலைவர்

9. யாருடைய விசாரணையின் அடிப்படையில் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு உறுப்பினர் பதவி நீக்கம் செயல்படலாம்?

அ) குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படும் குழு மூலம்
ஆ) உச்ச நீதிமன்றம்
இ) உயர் நீதிமன்றம்
ஈ) மாநில ஆளுநர் மூலம்

10. இந்திய தற்காலிக நிதியிலிருந்து ஏற்கப்படும் செலவுகள்

அ) இதர நிதிநிலை அறிக்கையிலிருந்து வரும் சேமிப்புகளை மாற்றுவதன் மூலம்
ஆ) நாடாளுமன்றத்தால் வழங்கப்படும் கூடுதல் மற்றும் துணை நிதிகளை மாற்றுவதன்மூலம்
இ) நிதி முழுவதும் தீரும்வரை மாற்றியமைக்கப்படாது
ஈ) பல மாநிலங்களில் இருந்து வரும் பங்களிப்புகளை ஈடுசெய்வதன் மூலம்

11. கீழ்கண்ட எந்த சட்ட முன்மொழிவு / தீர்மானம் மத்திய நிதிநிலை அறிக்கையோடு தொடர்புடையது?

அ) ஒத்திவைப்பு தீர்மானம்
ஆ) வெட்டு தீர்மானம்
இ) தணிக்கை தீர்மானம்
ஈ) இவையேதுமில்லை

12. மக்களவை வாக்குக் கணக்கில் வாக்களிகிறார்

அ) நிதி நிலை அறிக்கை அறிமுகத்தில் இருந்து அதன் தொடர்ச்சியாக ஏற்படும் செலவுகளை ஏற்பதற்கு
ஆ) இரகசிய பணிகளின் செலவிற்காக / உளவு
இ) எதிர்பாராத செலவுகளை ஏற்பதற்காக
ஈ) இவையேதுமில்லை



12th_Political Science_Tamil_Unit_6.indd 172 04-06-2019 11:34:30

13. கீழ்கண்டவற்றில் எந்த சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையோடு சேர்ந்து அளிக்கப்படுகிறது?

அ) தற்காலிக சட்ட முன்வரைவு மற்றும் ஒதுக்கீட்டு சட்ட முன்வரைவு
ஆ) நிதி சட்ட முன்வரைவு
இ) நிதி சட்ட முன்வரைவு மற்றும் ஒதுக்கீட்டு சட்ட முன்வரைவு
ஈ) நேரடி சட்ட முன்வரைவு வரி மற்றும் மறைமுக வரி சட்ட முன்வரைவு

14. அரசமைப்பில் மத்திய அரசு பல வரிகளை விதித்து, வசூல் செய்து அதை மாநிலங்களோடு பகிர்ந்தளிக்கிறது. இதில் எந்த அரசமைப்பு அதிகாரம் மாநிலங்களுக்கு வரிகளை பகிர்வதற்கு முடிவெடுக்கிறது?

அ) மத்திய நிதி அமைச்சர்
ஆ) நிதி ஆணையம்
இ) திட்டக்குழு
ஈ) மத்திய அமைச்சரவை குடியரசுத்தலைவரோடு கலந்து ஆலோசித்தல்

15. நாடாளுமன்றம் பல்வேறு வழிகளில் நிதியை கட்டுப்படுத்துகிறது அவற்றில் கீழ் காணும் பட்டியலில் எது தவறு

அ) மத்திய நிதிநிலை அறிக்கை தயாரித்து தாக்கல் செய்தல்
ஆ) தீர்வைகள், வரி விதித்து வசூலிக்கிறது
இ) இந்திய பொது நிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கிறது

16. இரண்டு அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையிலான மாநிலங்களின் கூட்டுப் பணியாளர் தேர்வாணையம்

அ) எந்த சூழ்நிலையிலும் அமைவதற்கு வாய்ப்பில்லை
ஆ) நாடாளுமன்றமே அமைக்க முடியும்
இ) தொடர்புடைய மாநிலச் சட்டமன்றங்களின் ஒப்புதல் பெற்று நாடாளுமன்றம் மூலம் அமைத்திட முடியும்
ஈ) தொடர்புடைய மாநிலங்களின் அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் பரிந்துரையின் பேரில்
குடியரசுத்தலைவரால் அமைக்க முடியும்

17. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முந்தைய அமைப்பான அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்ட ஆண்டு

அ) 1926
ஆ) 1930
இ) 1947
ஈ) 1950

18. நாடாளுமன்றம் பொதுவாக மூன்று கூட்டத்தொடர்களை கொண்டது, கீழ்வருபவற்றுள் தவறாக பட்டியலிடப்பட்டுள்ளது எது?

அ) நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடர்
ஆ) பருவக்காலக் கூட்டத்தொடர்
இ) இளவேனிர்க்காலம் கூட்டத்தொடர்
ஈ) மழைக்காலக் கூட்டத்தொடர்



12th_Political Science_Tamil_Unit_6.indd 173 04-06-2019 11:34:30

19. மக்களவை மாநிலங்களவையை விட உயர்ந்தது ஏனெனில்,

அ) மக்களவை நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு
ஆ) அமைச்சரவை குழு மக்களவைக்கு கட்டுப்பட்டது
இ) மக்களவை நிதிநிலை அறிக்கையை கட்டுப்படுத்துகின்றது.
ஈ) இவை அனைத்தும்.

20. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு கூட்டுத் தேர்வாணையம் என்பது

அ) எந்த நிலையிலும் தோற்றுவிக்க முடியாது
ஆ) நாடாளுமன்றம் தன்னிச்சையாக தோற்றுவிக்க முடியும்
இ) சம்பந்தப்பட்ட சட்டமன்றங்கள் கூட்டுத் தேர்வாணையம் உருவாக்க தீர்மானம் இயற்றிய பின் நாடாளுமன்றத்தால் உருவாக்க முடியும்
ஈ) சம்பந்தப்பட்ட மாநிலத் தேர்வாணையங்களின் தலைவர்களின் பரிந்துரையின் பெயரில் குடியரசுத்தலைவர் உருவாக்கலாம்.

21. **கூற்று (கூ):** ஒரு அமைச்சகத்தின் அனைத்துக் கொள்கைகள் மற்றும் நிர்வாக விவகாரங்களில் முதன்மை ஆலோசகர் அந்த அமைச்சகத்தின் செயலாளர்

**காரணம் (கா):** குடிமைப் பணிகளின் தலைவர், அமைச்சக செயலாளர்

அ) கூற்றும், காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகளாகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

22. பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) கூடுதல் செயலாளர் | – | 1. பிரிவு |
| ஆ) கீழ்நிலைச் (under) செயலாளர் | – | 2. கோட்டம் (Division) |
| இ) துணைச் செயலாளர் | – | 3. துறை |
| ஈ) செயலாளர் | – | 4. கிளை |
| | – | 5. பிரிவு |

அ) 5 4 2 3
ஆ) 1 2 3 5
இ) 2 1 3 5
ஈ) 3 4 5 2

23. **கூற்று:** ஐந்தாண்டு திட்டங்கள் அடிப்படையிலான வளர்ச்சி மாதிரியை இந்தியா பின்பற்றுகிறது.

**காரணம்:** ஒவ்வொரு ஐந்தாண்டு திட்டத்திலும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு அந்த இலக்கை எட்டும் வகையில் அதிகாரிகள் பணியாற்றுமாறு முடுக்கிவிடப்படுகிறார்கள்.

அ) கூற்றும், காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகளாகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

## II. பின்வரும் கேள்விகளுக்கு குறுகிய விடையளிக்கவும்

1. பொது நிர்வாகம் வரையறுக்கவும்.
2. வெளியுறவு அமைச்சகம் வரையறுக்கவும்.
3. பணியாளர் நிர்வாகம் என்றால் என்ன.
4. இந்திய ஆட்சிப் பணி (இ.ஆ.ப) IAS வரையறுக்கவும்.
5. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) வரையறுக்கவும்.
6. பணியாளர்த் தேர்வாணையம் என்றால் என்ன?
7. நிதி நிர்வாகம் விளக்குக.

## III. குறுகிய விடையளிக்கவும்

1. சுயாட்சியான ஒழுங்குமுறை ஆணையம் விளக்குக.
2. பொருள்கள் மற்றும் சேவை வரி(GST) என்றால் என்ன?
3. ஆயுஷ் என்றால் என்ன?
4. முறை சாரா தகவல் தொடர்பு என்றால் என்ன?
5. அகில இந்திய பணிக்கு பணியமர்த்தும் இரண்டு முறைகள் குறித்து எழுதுக.

## IV. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்

1. சட்டத்தின் ஆட்சியை விவரிக்க.
2. நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
3. பணியாளர் தேர்வாணையத்தின் பணிகள் குறித்து எழுதுக.
4. நிதி நிர்வாகத்தின் குறிக்கோள்களை விவரிக்க.
5. உள்துறை அமைச்சகத்தின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளை வரையறுக்க.

## மேற்கோள் நூல்கள்


- Ramesh K Arora, Rajini Goel,- Indian Public Administration Wishwa Prakashan Publications, January 2010.
- Laxmikanth M, Public Administration, TATA McGRAWHILL'S Publications, 2011.
- Shriram Maheshwari ,Indian Administration: An Historical Account, Published by Jawahar (1994).


## வலைத்தள இணைப்புகள்

- https://upsc.gov.in/
- https://cabsec.gov.in/
- https://www.pmindia.gov.in/en/prime-ministers-office/



12th_Political Science_Tamil_Unit_6.indd 175 04-06-2019 11:34:31